REGISTERED AS A NEWSPAPER  பக்கங்கள் 06

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

THE EELANAATHAM  மக்கள் தினசரி  PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 20 | 06-11-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 261

## தொகுதி, மாவட்ட ரீதியில் தேர்தல் முடிவுகள் வெளியாகும்

ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தேர்தல் தொகுதிவாரியாகவும், தேர்தல் மாவட்டவாரியாகவும் கட்டங் கட்டமாக வெளியிடப்படுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். போட்டியிடும் ஆறு வேட்பாளர்களில் நாடளாவிய செல்லுபடியாகும் வாக்குகளில் 50சதவீதத்தை பெறுபவர் ஜனாதிபதி பதவிக்கான உரிமையைப் பெறுவார். எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெறத்தவறின், முதலிரண்டு இடங்களைப் பெறும் வேட்பாளர்களுக்கு மற்றைய (6-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் சிந்தித்து வாக்களிக்காதுவிடில் இரத்த ஆறு ஓடுவதை தவிர்க்கமுடியாது!

## சிறிமா திசாநாயக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மக்கள் சரியான வழியில் சிந்தித்து வாக்களிக்காதுவிடின், நாட்டில் இரத்த ஆறு ஓடுவது தடுக்க முடியாததாக போய்விடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சிறிமா திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

நேற்று, ரூபவாகினியில் தனது இறுதிப் பிரசார உரையை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறுகையில், நாட்டின் தலைமையே நாட்டை வழி நடத்துவது எனவே இத்தகைய பொறுப்பான பதவிக்கு தகுந்தவரையே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். எனது ஒரே இலட்சியம் காமினியின் கனவுகளை நனவாக்குவதே.

இன்று விடுதலைப் புலிகள் தனியே இராணுவ ரீதியாக தாக்குவது மாத்திரமின்றி நாட்டின் தலைமைப் பீடத்தையே கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் வழியில் நடந்து வருகின்றனர். இதனால் நாடு ஸ்தம்பிதமான நிலைக்கு போய்விடலாம்.

இதனை தடுக்கவே உயிரையும் பணயம் வைத்து நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முன்வந்தேன்.

நாட்டுக்கு இன்று சமாதானம் தேவை. இதற்காக எமது இளைஞர்களை பலிகொடுக்க முடியாது. இன்று அரசாங்கமும் புலிகளும் நடத்தும் பேச்சுக்களை நாம் சமாதானப் பேச்சுக்களாக ஏற்றுக் கொள்ள முடியுமா? ஆகஸ்ட் பத்தாம் திகதி, பொதுஜன ஐக்கிய முன்னணி பதவி ஏற்றதும் செய்த காரியம் சென்ற அரசாங்கம் தடை செய்த பொருட்களை வடக்குக்கு அனுப்பியதன் மூலம் புலிகள் (6ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தின் ஆதரவுபெற சிறிமா முற்படுகின்றார்

(கொழும்பு)

ஆயுதங்களை கைவிட்டால் மாத்திரமே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த முன்வருவேன் என சிறிமா திசாநாயக்கா தனது பிரசார உரையில் கூறியிருப்பதானது, இராணுவத்தினரிடையே ஆதரவைத தேடும் ஒரு முயற்சியாகும் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

இவ்வாறான கருத்துக்கள் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும், இராணுவத்திற்குமிடையே முரண்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கில் திருமதி சிறிமா திசாநாயக்காவின் பிரசார உரை அமைவதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க 32 உலக மனித உரிமைவாதிகள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பதற்கென நான்கு நாடுகளைச் சேர்ந்த 22 பிரதிநிதிகளும், சர்வதேச நீதிமன்றத்தைச் சேர்ந்த இரு நீதியாளர்களும், சர்வதேச மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த 32 பேரும் கொழும்புக்கு வருகை தர இருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் நாடு பூராவிலும் தங்கள் கண்காணிப்பு பணிகளைச் செய்வார்கள் எனவும் அவர் தெரிவித்துளளார்.

இலங்கை வரும் மனித உரிமை பிரதிநிதிகளில் ஜேர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, கொங்கொங், கம்போடியா ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

இவர்களை விட உள்நாட்டின் பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் ஆகியோரும் சுயேட்சையான தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவர் எனவும் அறிவிக்கப்பட்டுளளது.

## தேர்தல் கடமைக்கு யாழ். அரச அதிபர் மறுப்பு

[கொழும்பு]

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அலுவலகராகப்பணியாற்றும் படி விடுக்கப்பட்ட பணிப்புரையை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் நிராகரித்து விட்டார்.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டின்கீழுள்ள பகுதிகளில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கும் சாத்தியப்பாடு தென்படவில்லை எனவும் தெல்லிப்பழையில் முந்திய அரசினால் அமைக்கப்பட்ட தேர்தல் செயலகத்தில் பணியாற்ற யாழ் அரசாங்க அதிபர் மறுத்து விட்டார் எனவும் ஐலண்ட் மேலும் கூறியுளளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் சந்திரிகாவின் வெற்றி உறுதியானது

### கருத்துக்கணிப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், பிரதமர் சந்திரிகா குமாரதுங்க 49ற்கும் 51ற்கும் இடைப்பட்ட சதவித வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என தென்னிலங்கையில் கருத்துக் கணிப்பொன்றை நடத்திய அரசசாராத அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

காமினி திசாநாயக்கவின் மரணத்தை தொடர்ந்து இக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டதாகவும், பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு அடுத்த படியான நிலையை திருமதி சிறிமா திசாநாயக்கா பெறுவதில் சந்தேகமில்லை எனவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நள்ளிரவுடன் பிரசாரங்கள் முடியும்

இன்று நள்ளிரவுடன் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்கள் யாவும் முடிவடையுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி நிட்டம்புவவிலும், ஐக்கியதேசியக்கட்சி ஹைட் பார்க் கோணரிலும் தங்கள் இறுதிப் பிரசார கூட்டங்களை நடத்தவுள்ளன. சிங்கள பூமிபுத்ர கட்சி, பாதுகாப்பு காரணங்களால் தனது தேர்தல் பிரசாரங்களை ஏற்கனவே நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தொலைக்காட்சியிலும், வானொலியிலும் நேற்றுடன் தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்கு வந்தன.

## சட்டத்தைமீறும் அதிகாரிகள் கைது செய்யப்படுவர்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது சட்டத்தை மீறும் உயர் அதிகாரிகளைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித்தேர்தல்காலங்களில் சட்டப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் இவற்றை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்என்றும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தடிசில்வா தெரிவித்துள்ளார்.

## ஐ. தே. க. பிரித்த இலங்கையை ஐக்கியப்படுத்துவதே குறிக்கோள்

### பிரதமர் சந்திரிகா

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தால் பிரிக்கப்பட்டுவிட்ட இலங்கையை மீண்டும் ஐக்கியப் படுத்துவதே தற்போதைய அரசாங்கத்தின் குறிக்கோள் ஆகும். சந்தர்ப்பவாதிகளின் தந்திரங்களால் நாட்டு மக்கள் ஏமாந்துபோக மாட்டார்கள் என நம்புகிறேன்

இவ்வாறு பிரதமரும் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளருமான திருமதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லமான அலரி மாளிகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் மேலும்கூறுகையில் இன உணர்வுகளை தூண்டி விடுவதன் மூலம் குறுகிய அரசியல் லாபம் பெற சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்

1977 முதல் இந்தநாட்டில் இனத்துவேஷத்தியை வளர்ப்பதற்கு இந்த சக்திகள் பொறுப்பாக இருந்துள்ளன. யுத்தத்தை ஒரு வர்த்தக நடவடிக்கையாக மாற்றுவதற்கு இச் சக்திகள் நன்மையடைந்துள்ளன.

முன்னைய அரசாங்கம் புலிகளுடன் இரகசியப் பேச்சு (6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய புலனாய்வுத் துறையைச் சேர்ந்த கார்த்திகேயன் விரைவில் கொழும்பு வருவார்

(கொழும்பு)

இந்தியப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த டி. ஆர். கார்த்திகேயன், தமிழ்நாடு பொலிசின் தடய அறிவியல் நிபுணர் பேராசிரியர் சந்திரசேகரன் ஆகியோர், காமினி திசாநாயக்காவின் கொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள விரைவில் கொழும்புக்கு வர இருப்பதாக காமினியின் குடும்ப உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வரும் இவர்கள், ஏலவே விசாரணைகளில் ஈடுபட்டுவரும் குழுவினருடன் இணைந்து செயற்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தொண்டா நிலைப்பாடுபற்றி ஐ.தே.க. விளக்கம் கோரும்

இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி தேர்தலில் கடைப்பிடிக்கும் நிலைப்பாடுகள் பற்றி அவரிடம் விளக்கம் கோரப்படும்.

இவ்வாறு ஐ. தே. கவின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் திருமதி சிறிமா திசாநாயக்கா கூறியுள்ளார்

செய்தியாளர் மாநாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், நாடு திரும்பிய பின் தொண்டமானிடம் பேச்சு நடத்தப்படும் எனவும், அதன் பின்னர் ஒரு முடிவு எடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## நெற்றியில் பொட்டுடன் சந்திரிகாவின் படங்கள்

### இனவாதத்தை தூண்டும் சுவரொட்டிகள்

காலி, மாத்தறை பகுதிகளில் நெற்றியில் பொட்டுடன் கூடிய திருமதி சந்திரிகாவின் படம் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. இனவாதத்தைத் தூண்டும் வகையிலான இச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டதன் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இரவோடு இரவாக இச் சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாகவும் இதனை ஒட்டுபவர்களைக் கண்டுபிடிக்க பொலிசார் சிரமப்படுவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

## இந்தியராணுவத்தை அழைப்பதற்கு காமினி பேச்சு நடத்தினார்

### ஏ. ஜே. ரணசிங்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் இந்தியா சென்ற காமினி திசாநாயக்கா இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அழைப்பது குறித்துப் பேச்சு நடத்தினார் என ஜனாதிபதி வேட்பாளரான ஏ ஜே. ரணசிங்கா பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர் நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் காமினி திசாநாயக்கா இந்தியாவுக்கு சென்றது இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார் (6ஆம் பக்கம் பார்க்க

## ஐ. தே. க. தேர்தல் பிரசாரத்தில் இனவாதத்தைக் கக்குகிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் பிரசாரங்களில் இனவாதத்தை கக்கி வருவதாக ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் குற்றஞ்சசட்டியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, தமிழ் முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்துள்ளதை தொடர்ந்து ஐ. தே. கவின் இனவாதம் இன்னும் தலை தூக்கியுள்ளது. இதை தவிட மதவாதம் பிரதேசவாதத்தையும் வளர்க்கின்றது இதன் ஒரு வழியாக ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளர் இரா (6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்தாயிரம் வாக்குப் பதிவு நிலையங்கள் அமைப்பு

ஜனாதிபதி தேர்தல் கடமையில் ஈடுபடும் அதிகாரிகள் இன்று முதல் தத்தம் இடங்களுக்கு புறப்படவுள்ளனர். சுமார் பத்தாயிரம் வாக்குப் பதிவு நிலையங்களும், 150 வாக்கு எண்ணும் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன. ஒரு லட்சம் அதிகாரிகளும், 45,000 பொலிசாரும் தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில் ஈடுபடவுள்ளனர்.

# 1980 வேலைநிறுத்தத்தின்போது தொழில் இழந்தோருக்கு தொழில்

(கொழும்பு)

1980 யூலை வேலை நிறுத்தத்தினால் தமது தொழில்களை இழந்து ஓய்வு பெறும் வயதை இன்னும் அடையாமல் இருக்கும் 1450 க்கும் மேற்பட்ட அரசாங்க ஊழியர்கள் மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இவர்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குரிய சம்பள உயர்வுகள் மற்றும் சலுகைகளும் வழங்கப்படும்;

மேற்படி தகவலை பொது நிர்வாக பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்டத் துறை பிரதி அமைச்சர் அத்தாவுட செனவிரத்தின தனது அமைச்சில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் - 1980 யூலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் பலர் வேலையிழந்தனர். கடந்த 14 வருடங்களாக இவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளனர், பலமுறை முயற்சி செய்தும் இவர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்படவில்லை. இது ஓர் அரசியல் பழிவாங்கலாகவே நடைபெற்றது.

எமது அரசு இவர்கள் விடயத்தில் விசேட அக்கறை செலுத்தி இதுவரை ஓய்வூதிய வயதை அடையாத சுமார் 1450 ஊழியர்களுக்கு முன்பு அவர்கள் வகித்த பதவிகளை வழங்க முடிவு செய்துள்ளது. இடைக்காலத்தில் இவர்கள் சம்பள உயர்வு, பதவி உயர்வு பெற வேண்டி இருப்பின் அதனையும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதிய வயதை அடைந்தவர்களுக்கு எந்த காலத்திலிருந்து ஓய்வுபெற வேண்டுமோ அந்த மாதத்திலிருந்து ஓய்வூதியமும் முற்பட்ட காலத்து சம்பளமும் வழங்கப்படும்; 1988 இல் வழங்கப்பட்ட 280 ரூபா ஓய்வூதிய அதிகரிப்பு இதுவரை பெறாதிருந்தால் அதனையும் மூன்று தவணைகளில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### றோணியோபிரதி செய்தல்

100பேப்பர் இரண்டு பக்கம் தெளிவாக பிரதி செய்வதற்கு 30 ரூபா மட்டும் அறவிடப்படுகிறது. ரைப்பிங் 8/- அறிவகம் புத்தகசாலை 374, மணிக்கூட்டுவீதி (வெலிங்டன் சந்திக்கருகாமை) யாழ்ப்பாணம்.

(9978)

### 04. 11. 94 இல் வியாழன் மாற்றம்

12 ராசிகளுக்கும் ஓராண்டுக்கான பலா-பலன்களை முன்கூட்டியே தரும் நூல், நாட்டுப் பலன்கள் மற்றும் சிறப்பம்சங்கள் உள்ளன, எழுதியவர் சோதிட ஞானி சண்முகநாதர் எங்கும் வாங்கலாம். சோபிதா புத்தகசாலை கே. கே. எஸ். வீதி யாழ், நார்;

(9987)

### ஆண்டிறுதிப்பரீட்சை

ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 8 வரையுள்ள வகுப்புகளுக்கு ஆண்டிறுதிப் பரீட்சை வினாத்தாள்கள் (சகலபாடமும்) 06. 11. 94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம் புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்;

(9991)

### புலமைப் பரிசிற் பயிற்சி

வெளிவந்து விட்டது! விற்பனையாகிறது, ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி 15 வினாத்தாள்கள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 24 தமிழ் கட்டுரைகள். 14 ஆங்கிலக் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டது.புத்தம் புதிய பயிற்சி, விசேட கழிவு உண்டு புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்;

(9992)

### திருவள்ளுவர் படம், அப்பியாசக் கொப்பி

மில்க்வைற் சவர்க்கார மேலுறைகளிலிருந்து திருக்குறளைப்பிரித்தெடுத்து 25எண்ணிக்கை எம்மிடம் சேர்ப்பித்து திருவள்ளுவர் வண்ணப் படம் ஒன்று அல்லது அப்பியாசக் கொப்பி ஒன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

'' மில்க்வைற் '' (சி/10656)

### தேர்தல்|கண்காணிப்பு

(கொழும்பு)

நான்கு நாடுகளைச்சேர்ந்த தேர்தல் கண்காணிப்புக்கு இன்னும் இரண்டொரு தினங்களில் கொழும்பு வந்து சேர்வர் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## பல்கலை, ஊழியருக்கு விரைவில் நட்டஈடு

நீண்டகாலமாக வழங்கப்படாதிருந்த யாழ். பல்கலைக்கழக ஊழியர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது:

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக துறைமுக கப்பற்துறை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் ஒன்றியத்தினால் நீண்டகாலமாக கோரிவந்த நட்டஈட்டுக் கொடுப்பனவை வழங்குவதற்கு எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாமல் இருந்தது.

யாழ். பல்கலைக்கழக ஊழியர் ஒன்றியத் தலைவர் அண்மையில் புனர்வாழ்வு அமைச்சர் எம். எச். எம்.அஷ்ரப்பை சந்தித்து பல்கலைக்கழக குறைபாடுகள் பற்றி தெரிவித்திருந்தார் இதனை அடுத்து நீண்டகாலமாக விடுக்கப்பட்டிருந்த கோரிக்கையை அமைச்சர் கவனத்தில் கொண்டு மேற்படி ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொலிசாரின் பதவியுயர்வு தீர்மானிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

பொலிசாரின் பதவியுயர்வுகள், இடமாற்றங்கள் என்பவற்றுக்கான சுதந்திர பொலிஸ் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரிகளுக்கு பல்வேறு நிவாரணங்களை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் சேவையாற்றும் அதிகாரிகளுக்கான கொடுப்பனவு பன்னிரண்டாயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படுமெனவும், வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் சேவையாற்றும் காலத்தை ஒருவருடமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

இளைப்பாறும் சகல பொலிஸ் கான்ஸ்டபிள்களும் சார்ஜண்ட் என்ற தரத்துக்கு பதவியுயர்த்தப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

## ரணிலுக்கு பதவி கிட்டியது; சபாநாயகர் பாராட்டு

(கொழும்பு)

ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்வதில் நான் பெருமை அடைகின்றேன் என சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் கே. பி. ரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்,

மிகவும் நிதானமான அரசியல் போக்கு கொண்ட ரணில் பல தடைகளைத் தாண்டி இந்த நிலையை அடைந்துள்ளார் என்றும் எதிர்காலத்தில் தனது கட்சி சபை நடவடிக்கைகளில் தனக்கு தோளோடு தோள் நிற்பார் என தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## விருது பெறுவார்

(கோலாலம்பூர்)

உலகத் தமிழர் மாமன்றத்தின் ஏற்பாட்டில் கோலாம்பூரில் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள தமிழ்மாநாட்டில் தமிழ்த் தொண்டாற்றியமைக்காக முது பெரும் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் மற்றும் இலங்கையின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம் போன்றோருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளது; தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த நாயுடு என்பவரும் விருது பெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

## மந்துவிலில் குணா நினைவு கற்பகச் சோலை ஆரம்பம்

(தென்மராட்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகமும் கொடிகாமம் தெங்குபனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்கமும் இணைந்து கடந்த முதலாம் திகதி முன்னாள் தென்மராட்சி கோட்ட சிறப்பு பொறுப்பாளர் லெப். கேணல் குணா அவர்களின் ஞாபகார்த்தமாக தென்மராட்சிப்பகுதியில் கொடிகாமம் மந்துவில் என்னும் இடத்தில் கற்பகச் சோலையில் இருபது ஆயிரம் பனம் விதைகளை நாட்டினர்;

கூட்டுறவு பொதுமுகாமையாளர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் முதலில் தேசியக் கொடியினை தென்மராட்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு மகிந்தன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து கூட்டுறவு கொடியினை திரு. ஜபாத்துரை அவர்கள் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து முதல் பனம் விதையினை தென்மராட்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் திரு- புலேந்திரன் நாட்டி வைத்தார் இந் நிகழ்வில் கூட்டுறவாளர்கள், பொது மக்கள் விவசாயிகள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்;

(86)

## சங்கலொறியில் பற்றறி திருட்டு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்க லொறியில் இருந்து பற்றறி திருடப்பட்டுள்ளது; கடந்த புதன் கிழமை இரவு இடம் பெற்ற இச் சம்பவத்தின் போது யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க லொறியில் பொருத்தப்பட்டிருந்த பற்றறியே திருட்டுப் போனது. சங்கத்தினால் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட புது லொறியில் இருந்த பற்றறியே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும், சம்பவ தினம் சங்க இரவுக் காவலாளி கடமையில் இருந்த போதிலும் திருடர்கள் லாவகமாக உட்புகுந்து பற்றறியை திருடிச் சென்று விட்டதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன;

(22)

## ஓடுகளை திருடிய ஆலய உறுப்பினருக்கு தண்டனை

(தென்மராட்சி)

பொது மக்களிடம் பொய் கூறி ஆலயத்தின் ஓட்டுக்கென பணம் சேகரித்து விட்டு வீடு ஒன்றில் இருந்த ஓட்டினைகவ வாடிய ஆலய நிர்வாக உறுப்பினர் நால்வருக்கு குற்றப் பணம்கட்டும்படி சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பளித்தது!

பனைப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் நிர்வாக உறுப்பினராக இருந்த நால்வர் மேற்படி பிரதேசத்தில் ஆலயத்திற்கு ஓடு வாங்குவதற்கென்க் கூறி பொதுமக்களிடம் பணத்தை சேகரித்து விட்டு இயக்கச்சி பகுதியில் ஆட்கள் இல்லாத பாலையா என்பவரது வீட்டில் போடப்பட்டு இருந்த 2175 ரூபா பெறுமதியான 107ஓடுகளை இவர்கள் வண்டி ஒன்றில் ஏற்றி இவர்களது ஆலயத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

மேற்படி வீட்டுக்காரர் வீட்டைப் பார்த்து விட்டு திகைத்து உடன் வண்டி சென்ற அடையாளத்தினை வைத்துசென்றுபார்த்தபோது ஓடுகள்ஆலயத்தினுள் இருந்து பிடிபட்டது] அவர் பனை காவல் துறையினருக்கு கொடுத்த முறைப்பாட்டின் படி காவல் துறையினர் எதிராளியான நால்வரையும் மன்றில் முற்படுத்தினர்.

## இளைஞர் பலி

வவுனியா இறம்பைக்குளத்தில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு இளைஞர் ஒருவர் பலியானார் செவ்வாயன்று நடைபெற்ற இச்சம்பவத்தில் வேப்பங்குளத்தை சேர்ந்த பரராஜசிங்கம் காந்தமூர்த்தி (14) என்பவரே மரணமானவராவார்.

## தமிழகத்திலிருந்து அகதி பெப்ரவரி மாதம் வருவர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை திருப்பியனுப்புதல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இருந்து மீண்டும் ஆரம்பமாகுமென அகதிகளுக்கான ஐ. நாவின் உயர்ஸ்தானிகராலய வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

தற்சமயம் மழைகாலம் ஆரம்பித்திருப்பதையும், இந்தியாவில் அண்மையில் மிக வேகமாக பரவிய கொள்ளை நோயின் தாக்கத்தை அடுத்தும், தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தியாவில் கொள்ளை நோயின் தாக்கம் குறைந்து வருவதை அடுத்தும் பெப்ரவரியுடன் மழை காலம் முடிவடைவதாலும் எதிர்வரும் பெப்ரவரி தொடக்கம் தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பியனுப்பப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

(பா)

## தீவக தேர்தல் கடமைக்காக 800அரச ஊழியர் வருவர்

(கொழும்பு)

தீவகப்பகுதி தேர்தல் கடமைக்காக 800 அரச ஊழியர்கள் இன்று ஞாயிறன்று வந்து சேர்வர் எனத்தெரிவிக்கப்படுகிறது இவர்கள் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து விசேட விமானம் மூலம் புறப்படுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது;

யாழ் மாவட்டத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள இடங்களில் தேர்தல் நடவடிக்கையில் இவ்வூழியர்கள் ஈடுபடுவர் எனக் கூறப்படுகிறது.

---

## நினைவு கூருகின்றோம்...

### 06. 11. 94

1987-ம் ஆண்டு இதேதினத்தில் சாம்பல்தீவுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் குமார்-அத்தான்** (செல்வநயினார் தயானந்தரூபன் - திரியாய் - திருமலை)

**ஜெரோம்** (சரவணமுத்து குகதாசன் - கைதடி, நுணாவில் - யாழ்)

1988-ம் ஆண்டு ஒளி - உமையாள்புரம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**வேதா- பவுண்** (தில்லையம்பலம் துரைராஜசிங்கம் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

1990-ம் ஆண்டு வீமன்காமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மதன்** (ராயப்பு அகஸ்ரின் சதீஸ்குமார் - புலோப்பளை கிழக்கு - பளை)

**லெப். சுஜி** (பொன்னுத்துரை நாகஜீவா - வட்டக்கண்டல் - மன்னார்)

இந்நாளில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொலை செய்யப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்


ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10652)

---

## 5ம் ஆண்டு 2ம் ஆண்டு நினைவஞ்சலிகள்



சின்னப்பொடி சூரர்



சூரர் மாம்பழம்

1922-10-28 <மலர்வு> 1924-02-29

1989-11-09 <உதிர்வு> 1992-10-28

1994-11-13 <திதி> 1994-11-06

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சங்பொல்லை வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

(9989)

---

## 1.ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14-1-1958

உதிர்வு 6-11-1993

**த. புஸ்பராசா (துரையான்)**

(தலைவர் பலாலி கடற்றொழிலாளர் சங்கம்)

(பலாலி வடக்கு)

'ஓவியத்தில் நேசித்தவரே மரணத்தில் மறவாதீர்'.

அன்புள்ளம் கொண்டவரும், துன்புறும் மக்களின் நண்பனும், இறைவன் தமக்களித்த ஆற்றல்களையும், திறமைகளையும் மக்களுடன் பகிர்ந்து வாழ்ந்த பண்பாளனுமான எம் குடும்பத் தலைவனை இந்நாளில் நன்றியுணர்வுடன் நினைவு கூர்ந்து. அவர் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோம்.

பொலிகண்டி

மனைவி, மகன்.

(9993)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**மேஜர் மறைவண்ணன்/கெனடி**

(ஏரம்பு சிவலேசகநாதன்)

திருகோணமலை

தோற்றம் 23.02.1964

வீரச்சாவு 05.10.1994

உன்னடிகள் பட்ட துகள்
உலராத குருதியிலே
மண்ணடியைப் பண்படுத்தி
மானத்தின் பயிர்விளைக்கும்
தன்னடிமை புன்னிலையை
தமிழீழம் உணர்ந் தெரியாய்
விண்ணிடியப் போர் மலையும்
விடியலெனும் வேளைவரும்
கொன்னடியே நெஞ்சகத்திற்
குளிர்ந்துவரும் உயிர்க்காற்றே
பொன்னடிகள் பணிந்திடுவோம்
போயுறங்கு போயுறங்கு.

(9990) றோசி, மற்றும் உறவினர்கள், நண்பர்கள்;

# அனுபவம் வாய்ந்த வீரர்கள் கொண்ட நாவாந்துறை சென். மேரிஸ் வி. கழகம்

## -நிறைந்த சாதனைகளில் ஒருசில-

1979-ல் இந்தியா சென்ற யாழ். தெரிவுக்குழு அணியில் எட்டுப்பேர் சென். மேரிஸ் அணியினர். இவர்களுள் அலோசியஸ் (சிறி) தற்போது அணியின் வீரர்.

1978-ல் கண்டி மாவட்ட - யாழ். மாவட்டப் போட்டி- 6 பேர் சென். மேரிஸ் அணியினர். இவர்கள் நால்வர் முன் வரிசை வீரர்.

மணி, அமலதாஸ், பிரான்சிஸ், ராசா, அந்தனி, அலோசியஸ் (சிறி)

1981 - 62 கழகங்கள் பங்குகொண்ட போட்டியில் காம்பியன் (இறுதியாட்டம் எதிர் கிறீன் பீல்ட் 7 - 1)

92- சிறிமுருகன் வி. க. கேடயம் விளையாடிய ஆட்டங்கள் 5. இறுதிப் போட்டியில் 6 - 1 என்ற வெற்றி. முழு சுற்றுப்போட்டியிலும் எதிராகப் போடப்பட்டது 1 கோல் மட்டுமே.

78-ல் பலம் வாய்ந்த யாழ். தெரிவுக்குழுவிற்கு சாம்பியன் அணியான சென். மேரிஸ் அணி 4 கோல்கள் அடித்துத் தோற்கடித்தது.

'94 லெப். செங்கண்ணன் ஞாபகார்த்த சுற்றுக்கிண்ணத்தை வென்றெடுத்தவர்கள் நாவாந்துறை சென் மேரிஸ் வி.கழகத்தினர், உதைபந்தாட்டத்தில் நீண்ட பாரம்பரியமொன்றைக் கொண்ட இவ் அணியினரைச் சந்திக்குமுகமாக சென்றபோது நாவாந்துறை பரலோகமாதா ஆலயத்துக்கு உரித்தான ஆங்காங்கே நீர் நிறைந்த மைதானத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருப்பதைக் காணமுடிந்தது. அளவில் குறைந்த இம்மைதானத்தில் இவர்களின் கழக அங்கத்தவர்கள் ஒரு புறமாக வலைப்பந்தாட்டப் பயிற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

91ஆம் ஆண்டில் 5 வெற்றிக் கிண்ணங்களையும் 92-ல் 5 வெற்றிக் கிண்ணங்களையும் வென்ற இவர்கள் 93-ல் பெரிதும் சோபிக்க இயலவில்லை. திறமை மிக்க வீரர்கள் தொழில் நிமித்தம் வெளியூர்களுக்குச் சென்றதே இதற்குக் காரணமாகும். இருந்தும் கடந்த காலத்தில் இளம்வீரர்களைப் பயிற்றுவித்து மூத்த உறுப்பினர்களும் இணைந்து பலமான அணியொன்றைக் கட்டி எழுப்பியுள்ளனர்.

சென் மேரிஸ் அணியின் சிறப்பியல்புகளில் ஒன்றாகக் காணப்படுவது மூத்த உறுப்பினர்களின் பங்களிப்பாகும்; இவர்கள் சராசரி 35 வயதையுடையவர்கள் தம்முடன் சமகாலத்தில் பல்வேறு கழகங்களில் ஆடிய வீரர்கள் பெரும்பான்மையினரும் ஓய்வு பெற்றுவிட தாம் இன்னமும் களத்தில் நிற்பதையிட்டு மகிழ்ச்சி கொள்கிறார்கள். அலோசியஸ் (சிறி) றொட்றிகோ- எட்வட் பஞ்சன்- எதிர்சிங்கம் ஆகியோரே இவர்கள் சிறி 76இல் இருந்தும் ஏனையோர் 79-ல் இருந்தும் அணியின் நிரந்தரமாக திறமை மிக்க வீரர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சென். மேரிஸ் அணிவீரர்கள் எல்லோரும் ஒன்றை வற்புறுத்திக் கூறுகிறார்கள். தம் கழக விளையாட்டுத்துறைத் தலைவர் திரு சந்தியோ மதியாபரணம் இவ்வணியைக் கட்டியெழுப்ப தருகின்ற ஊக்கம், முயற்சி, அர்ப்பணிப்பு என்பன பற்றி மிகவும் நன்றியுணர்வுடன் உயர்வாகக் கூறுகின்றார்கள். அவரது முயற்சி இன்றி தாம் இந்தளவு புகழ் பெறுதல் சாத்தியமற்றது என்கிறார்கள்.

கழகத்தின் மூத்த உறுப்பினர்களுடன் அவர்களின் பங்களிப்புப் பற்றி உரையாடிய போது பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே இன்னமும் விளையாடிக்கொண்டிருக்கிறோம். இருந்தும் எமக்கொரு பணி உள்ளது எமது கிராம சிறார்களை மெதுமெதுவாகப் பயிற்றுவித்து சென். மேரிஸ் அணிக்குள் கொண்டுவரவேண்டும் அணியைப் பலப்படுத்தவேண்டும் முக்கியமாக ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றை அவர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். அதனை செயற்படுத்துவதையும் உறுதிசெய்ய வேண்டும். பிழைநிலை விளையாட்டு என்பது தவிர்க்கமுடியாததுதான்- அது விபத்தாகவே மிக அருந்தலாக ஏற்படும் ஆனால் அதையே விளையாட்டு முறையாகக் கொண்டு விளையாட எண்ணக்கூடாது அது மிகவும் தவறாகும். அத்தோடு இளம் வீரர்களின் எதிர்காலத்தையும் அது பாழடித்துவிடும். இவற்றை நாங்கள் மிகவும் உறுதியாக நம்புகிறோம் எனும் இம் மூத்த உறுப்பினர்கள் இளம் வீரர்களை படிப்படியாக உள்நுழைத்து பின்மெதுவாக ஒவ்வொருவராக அணியில் இருந்து ஓய்வுபெற எண்ணியுள்ளோம் என்று மிகவும் பெருந்தன்மையாகக் கூறுகிறார்கள்;

பொருளாதார நிலைமைகள் பற்றிய பேச்சு வந்த போது, நாவாந்துறை கிராம மக்களின் ஆதரவு அளப்பரியது என்கிறார்கள் அணியினர். இவ்வளவு துன்பகரமான ஒரு நிலையிலும் நாம் சுற்றுப்போட்டிகளில் பங்கு கொள்கிறோம், வெல்கிறோம் என்றால் அதற்குக் காரணம் எமது கிராம மக்களே. அவர்களது பொருளாதார ஒத்துழைப்புப் பற்றி இலகுவில் கூறிவிடமுடியாது; எமது வெற்றிக்காக தாங்கள் துன்பத்தைச் சுமக்கத் தயாரான மக்கள் இவர்கள் உதைபந்தாட்டத்தையும் எம்மையும் மிகவும் நேசிப்பவர்கள் உணர்வுபூர்வமானவர்கள் என்கிறார்கள் மிகவும் நெகிழ்ச்சியுடன்.

அணித்தலைவர், இளைய தலைமுறையைச் சேர்ந்தவர், யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிக சிறப்புப்பட்டதாரி மேலும் இவ்வருடம் யாழ் பல்கலைக்கழகம் வழங்கிய கல்வி, கலைகலாச்சார விளையாட்டு என்பவற்றை ஒன்றிணைத்த தங்கப்பதக்கத்தை முழுப் பல்கலைக்கழகத்திலும் முதன்மை பெற்று பெற்றுக் கொண்டவர் ஜோசப் சந்தியோ மைக்கல் கொலின்ஸ். இவரிடம் உரையாடிய போது ' நாங்கள் எங்கள் மூத்த உறுப்பினர்களான நான்கு தூண்களையும் நம்பித்தான் களத்தில் இறங்குகின்றோம் ஒவ்வொரு ஆட்டத்திலும் களத்தில் எம்மை வழிநடத்துபவர்கள் அவர்கள். உண்மையில் அவர்களின் நிழலிலேயே நாங்கள் விளையாடுகின்றோம். பின்னணி வீரர்கள் தயான், ஜோன்சன் ஜெயரட்ண சிங்கம், ஆ. றேமன்ட் மனோபவன் பிரேம்குமார் ஆகியோர் எமது பாதுகாப்பு அரண் அற்புதமான விளையாட்டு வீரர்கள் இதே போன்றதே எமது முன்னணி வரிசையும் எமது நம்பிக்கை நட்சத்திரமான பவுண் மிகச் சிறந்த இளைய தலைமுறை வீரர் இவருடன் கிதராஜா ஈடன் அருள்தாஸ் (துள்ளு) எமது கோல்காப்பு வீரர் எல்விஸ் எல்லோரும் சரியாக இணைந்தோமென்றால் மிகச் சிறப்பாக விளையாடுவோம். இம்முறை எமது முன்னணி வீரர்கள் சின்னவன் தாசன் ஆ. தங்கத்துரை ஆகியோர் எம்முடன் இணைந்து விளையாட இயலவில்லை. இது எமக்குப் பேரிழப்பு என்பவர் தொடர்ந்து ஆரம்பத்தில் எனது அணியினர் கூறியது போலவே நானும் சகல தரப்பாருக்கும் நன்றியுடையவனாக இருக்கிறேன். மேலும் எதிர்காலத்தில் ஒழுங்கு, கட்டுப்பாடு திறமை நிறைந்த அணியாக ஏனையோருக்கு முன்மாதிரியாகத் திகழக்கூடிய அணியாக சென் மேரிஸ் அணியை வளர்த்தெடுப்பதே எமது இலட்சியம்'' என்கிறார்.

**நிர்மலன்**

திறமையும், வளரவேண்டும் என்ற எண்ணமும் கொண்ட சென். மேரிஸ் அணியினருக்கென சொந்தமான மைதானம் ஒன்று இல்லை என்பதும் குறிப்பிடத்தக்க தொன்றாகும். ஆனால் இவர்களிடம் நிறைய உறுதி காணப்படுகின்றது.

நேர்விலக்கான நீலமும் வெள்ளையும் கோடுகள் கொண்ட ஜேர்சி அணிந்த இவர்கள் தமது வெற்றிக் கேடயத்தோடு கம்பீரமாகக் காணப்படுகிறார்கள் இவர்களின் வளர்ச்சியின் சென். மேரிஸ் சனசமூக நிலையத் தலைவர் ச. மரியாம்பிள்ளை, செயலர் அ மரியாம்பிள்ளை, பொருளாளர் அ. தங்கத்துரை ஆகியோரின் பங்களிப்பும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களின் பங்களிப்பும் நிறையவே இருந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

சிறீதாஸ், சென் கென்றிஸ் றோயல், சென் நிக்கலஸ் போன்ற பலம் வாய்ந்த அணிகளை மேவி இவர்கள் வெற்றிக் கேடயம் பெற்றுக்கொண்டது பாராட்டுக்குரியதே.

சென். மேரிஸ் அணியினரும் நாவாந்துறை மக்களும் உதைபந்தாட்டத்தை எவ்வளவு நேசிக்கிறார்கள் என்பதை இரண்டு சந்திப்புக்களின் போதும் நன்றாக உணர முடிந்தது. வேகமாக வளர்ந்து வரும் நாவாந்துறை மக்களின் கழக வீரர்களின் அன்பும் உபசரிப்பும் மனதைத் தொட்ட தொன்றாகவே அமைந்தது. இவர்கள் மென்மேலும் வளர்ந்து புகழ் பெற விளையாட்டரங்கு ரசிகர்கள் சார்பில் வாழ்த்தினோம்.

### சுவீகரித்த கேடயங்கள்

**1991**

யாழ். உதைபந்தாட்ட லீக் கேடயம்
குமரையா ஞாபகார்த்த கேடயம்
லெப். கேணல் சரா கேடயம்
வீனஸ் வி. க. கேடயம்
சுருட்டு தொழிலாளர் சங்கக் கேடயம்

**1992**

ஸ்கந்தா வி. க. கேடயம்
பாரதி வி. க. கேடயம்
சிறிமுருகன் வி. க. கேடயம்
சென். மேரிஸ் வி. க. கேடயம்
காந்திஜி வி. க. கேடயம்

1ஆம் இடம் A கழகம்
2ஆம் இடம் B கழகம்

## சென். பற்றிக்ஸ் - சென். ஜோன்ஸ்

# விறுவிறுப்பான ஆட்டமாய் அமைந்த உதைபந்தாட்டப் போட்டிகள்

கல்லூரிகளுக்கிடையே வருடாந்தம் இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டிகளில் சேன் ஜோன்ஸ் கல்லூரி அணியும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதுகிறது என்றால் பன்னெடுங் காலமாக இரசிகர்களுக்கும், அதில் பங்கு பற்றும் வீரர்களுக்கும் புத்துணர்வும் கரைபுரண்ட உற்சாகமும் ஏற்படுவது யாழ் மக்கள் அறிந்த உண்மை.

போக்குவரத்து சீராக இருந்த காலத்தில் இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்களும், அனுதாபிகளும் கொழும்பில் இருந்தும் வேறு பல இடங்களில் இருந்தும் யாழ்ப்பாணம் வருவது வழக்கமான தொன்றாகும். சூழ்நிலைகள் சரியாக இல்லாமல் இருந்தும் நேற்று முன் தினம் சென் ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இவ் இரு அணிகளுக்கும் இடையில் இவ்வருட உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றபோது பெரும் திரளான மக்கள் கூடி கண்டுகளித்தனர். வீரர்களும் இரசிகர்களை ஏமாற்றவில்லை: தம்மால் இயன்றளவு சாதுரியமாகவும் உற்சாகமாகவும் ஆடி இரசிகர்களை மகிழ்வித்தார்கள்.

மூன்றாவது பிரிவுக்கான ஆட்டம் சரியாகப் பிற்பகல் 2.30 மணிக்குஆரம்பமானது. இவ் ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் அணி 2;1 என்ற கோல் கணக்கில் வென்றது. சென் பற்றிக்ஸ் அணிக்கான இரு கோல்களையும் வீரன் றொணியும், சென் ஜோன்ஸ் அணிக்கான கோலை வீரன் கபிரியேலும் பெற்றுக் கொடுத்தனர்; இவ் ஆட்டத்திற்கு நடுவராக கப்டன் D.A M குணசிங்கம் கடமையாற்றினார்.

இரண்டாவது பிரிவு ஆட்டம் பிற்பகல் 3.20 மணிக்கு ஆரம்பமானது. இவ் ஆட்டத்தில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 1;0 என்ற கோல் கணக்கில் வென்றது: இவ் அணிக்கான கோலை வீரன் அமறன் கிறிஸ்ரி பெற்றுக் கொடுத்தார். அதேவேளை ஆட்டம் முடிவடைவதற்குப் 11 நிமிடங்கள் இருக்கையில் சென் பற்றிக்ஸ் அணிக்குக் கிடைத்த பெனால்டி உதையை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாதது குறிப்பிடத்தக்கது. இவ் ஆட்டத்திற்கு நடுவராக திரு. எஸ். கனியூட் அவர்கள் கடமையாற்றினார்

**கப்டன் D.A.M. குணசிங்கம்**

இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த முதலாவது பிரிவு ஆட்டம் பிற்பகல் 4.20 மணிக்கு இரசிகர்களின் பலத்த கரகோசத்தின் மத்தியில் ஆரம்பமானது. ஆட்டத் தொடக்க நேரம் முதல் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் எதிர் அணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தபோதிலும் முதல் 20 நிமிடங்களும் எந்த ஒரு அணியும் கோல் எதையும் போடவில்லை சரியாக 4.40 மணிக்கு சென் ஜோன்ஸ் அணி வீரன் சஞ்சீவ் வெகு நுட்பமாக பந்தைக் கோல் காப்பாளருக்கு மேலால் தூக்கிப் போட்டு முதற் கோலை தமதணிக்குப் பெற்றுக்கொடுத்தார் இடைவேளையின் போது சென் ஜோன்ஸ் அணியே 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின் 4.55 ற்கு சென். பற்றிக்ஸ் அணி வீரன் மகேந்திரராஜா வெகு திறமையாக ஆடி பந்தைத் தலையால் இடித்து ஒரு கோலைத் தமதணிக்குப் பெற்றுக் கொடுத்தார். இவ் வேளையில் உணர்ச்சி வசப்பட்ட சில இரசிகர்கள் மைதானத்துக்குள் பிரவேசித்த மகேந்திரராஜாவைக் கட்டித் தழுவித் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து 5 வது நிமிடத்தில் அதாவது 5 மணிக்கு சென். ஜோன்ஸ் அணி வீரன் அரவிந்தன் மதிநுட்பமாக ஆடி ஒருகோலைத் தமது அணிக்குப் பெற்றுக் கொடுத்தார். இக்கோல் போடப்பட்டவுடன் எழுந்த கரகோசம் அடங்க சில வினாடிகள் எடுத்தது அதன் பின் இரு அணியினரதும் ஆட்டத்தின் வேகம் பன்மடங்காக அதிகரித்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் சென். பற்றிக்ஸ் அணித்தலைவன் அன்றுமிலன் வியக்கத்தக்க விதத்தில் ஆடி 5.05 மணிக்கு ஒரு கோலைபபோட்டார் மீண்டும் கை தட்டலும் மகிழ்ச்சி ஆரவாரமும் மைதானப் பிரவேசமும் இடம்பெற்றது;



இரு அணிகளும் இரண்டிற்கு இரண்டு என்ற சமநிலையில் கோல்களைப் பெற்றிருந்ததினால் இனிக் கோலைப் போடும் அணியே வெற்றியீட்டும் என்ற நிலையில் இரசிகர்கள் பதற்றமடைந்து கொண்டும் விளையாட்டை இரசித்த சிலர் எழுந்து நிற்பதையும் அவர்களின் பின்னால் நின்றவர்கள் நுனிக்காலில் நின்று எட்டிப் பார்ப்பதுமாய் அந்தரப்பட்டுக் கொண்டு இருந்த வேளையில் சென் பற்றிக்ஸ் அணி வீரன் எலிங்டன் 5. 18 மணிக்கு வெகு வேகமாக பந்தையடித்து தமது அணியின் வெற்றிக்கு வழி வகுத்து கொடுத்தார்;

சென், ஜோன்ஸ் அணி தோல்வியைத் தழுவிக் கொண்டபோதிலும் அதன் அணித்தலைவனும் கோல் காப்பாளருமான சுற்றிஜன் செல்லத்துரையின் அபார கோல் காப்புத் தன்மையை பாராட்டாமல் இருக்க முடியாது-

இவ் ஆட்டம் வெகு பரபரப்பாக இருந்தமையினால் முறை தவறி ஆடியமைக்காக சென். ஜோன்ஸ் அணி வீரர்கள் 17 தடவைகளும் சென் பற்றிக்ஸ் அணி வீரர்கள் 15 தடவைகளும் கையால் பந்தை அடித்தமைக்காக சென். ஜோன்ஸ் அணி வீரர்கள் இருதடவையும் சென். பற்றிக்ஸ் அணி வீரன் ஒரு தடவையும் நடுவரினால் தண்டிக்கப்பட்டனர்.

1988-ம் ஆண்டிற்குப்பின் சென்ற் பற்றிக்ஸ் அணி சென் ஜோன்ஸ் அணியை இம்முறை வென்றுள்ளமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும்;

இவ் அணிகளில் சென் பற்றிக்ஸ் அணிக்கு திரு தேவநாயகம் அவர்களும் சென் ஜோன்ஸ் அணிக்கு திரு எஸ் கிளிபேட் அந்தனிப்பிள்ளை அவர்களும் பயிற்றுநர்களாக இருக்கிறார்கள்

இவ் ஆட்டத்திற்குப் பிரதம நடுவராக திரு. எம். பிரான்சிஸ் அவர்களும் உதவி நடுவர்களாக திருவாளர்கள் ஏ.தேவராஜா, எஸ். கனியூட் ஆகியோரும் கடமையாற்றினார்கள்;

# விளையாட்டு அரங்கு

## பாடும் மீன் வி. க. = ஞானமுருகன் வி. க:

# பலம் மிக்க இரு அணிகள் மோதிய அற்புதமான உதைபந்தாட்டப்போட்டி

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடமைதானத்தில் கடந்த 30, ஞாயிற்றுக்கிழமை அருமையானதோர் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. சிறிது இடைவெளியின் பின் குருநகர் பாடும் மீன் அணியின் சிவப்பு மஞ்சள் மேலங்கிகள் மீண்டும் மைதானத்தில் கம்பீரமாகக் காட்சியளித்தன விட்டஇடத்திலிருந்தே தொடங்குவது போல பாடும்மீன் அணியினருடன் விளையாட மயிலங்காடு ஞான முருகன் அணியினர் கம்பீரமாக களத்தில் காணப்பட்டனர். இந்த நேசபூர்வமான விளையாட்டை ஒழுங்கு செய்தவர்கள் இவ்வகையில் பாராட்டுக்குரியவர்கள் இரு அணியினருமே பலமிக்கவர்கள் இரு அணியினரும் விட்டுக்கொடுக்காமல் சளைக்காமல் போட்டியிடுபவர்கள் என்று நன்றாகவேதெரிந்து கொண்ட ரசிகர்கள் கூட்டமும் எக்கச்சக்கமாகவே கூடியிருந்தது.

இந்த ஆட்டம் துவங்கிய வினாடி முதல் இறுதி விசில் ஊதப்படும் வரை மாறி மாறி பரபரப்பைஏற்படுத்திக் கொண்டேயிருந்தது. சாதக பாதக மாற்ற நிலைகளுக்கிணங்க ரசிகர்களும் மாறி மாறி கரகோசத்தையும் அங்கலாய்ப்பையும் வெளிப்படுத்திக் கொண்டே இருந்தனர் ஆட்டம் தொடங்கியதும் ஞானமுருகன் அணியினர் சிறிது நேரம் பாடும் மீன் அணியினருக்கு பெரும் அழுத்தம் கொடுத்து ஆடினர். முன்வரிசை இடதுகரை ஆட்டக்காரர் ரதீஸ்வரன் அற்புதமாக பந்தை கோல் கம்பங்களுக்கு முன்புறம் கொண்டு வந்து தள்ளினார். இருந்தும் பாடும் மீன் பின்னணி வீரர் அவற்றைத் தடுத்துமுன்னால் தள்ளி விட்டார். சிறிதுவேளைமாறிமாறி இரு அணியினரும் எப்படியாவது கோல்போட முனைந்தாலும் பின் காப்புவீரர்கள் விடுவதாயில்லை. ஞானமுருகன் அணியின் பாபு அற்புதமாக பந்துகளைத் தடுத்துக்கொண்டேயிருந்தார் இடைவேளை வரை எப்படியும் ஒரு கோல் போட்டு விட இருபகுதியினரும் படாத பாடுபட்டனர். ஆனால் இயலவில்லை,

இடைவேளையின்பின் ஆட்டம் திடீரென்று இன்னும் சூடு பிடித்தது பாடும் மீன் அணியினர் புதுவேகங் கொண்டு கடுமையான அழுத்தத்தை எதிரணியின் மீது தொடுத்தனர். எதிரணியினர் அவற்றைச் சமாளித்துக் கொண்டு தாங்கள் வியூகத்தை உடைத்துக் கொண்டு கோல் போட முனைந்தனர் ஆனால் ஆட்டம் முடிய 10 நிமிடங்கள் இருக்கையில் பெரியபாப்பா அதிரடியான உதையின் மூலம் பாடும்மீனுக்கு அரியதொரு கோலைப் பெற்றுக் கொடுத்தார் இதன் பின் ஞானமுருகன் அணியினர் மறுபுறமாக அழுத்தம் கொடுத்தனர். ஆட்டம் முடிய ஐந்து நிமிடங்கள் இருக்கையில் ஞானமுருகன் அணியினர் பந்தை இலாவகமாக பாடும் மீன் வியூகத்தை வெற்றிகரமாக உடைத்துக் கொண்டு வீரர்களைத் தாண்டி பின் காப்பு வீரர்களையும் ஏமாற்றி கோல் காப்பு வீரரையும் தாண்டி பந்தை உள்ளே தள்ளினர். இது நிச்சயம் கோல் தான் என எண்ணிய வேளை பாடும் மீன் பின் காப்பு வீரர் பேட்டி எங்கிருந்தோ கண்ணிமைக்கும் நேரததில் பாய்ந்து வந்து அந்தப் பந்தை வெளியே தள்ளியது பிரமிப்பூட்டுவதாக இருந்தது. அதை அடுத்து ஐந்தாவது நிமிடம் ஆட்டம் முடிவடைந்தது பாடும் மீன்சார்பில் டார்வின் பெரிய பாப்பா, ஞானமுருகன் சார்பில் பாபு, சிந்து ஆகியோர் கூடிய வீச்சைக் காட்டி விளையாடினர் என்றால் மிகையில்லை. மொத்தத்தில் மிக அருமையானதொரு ஆட்டம் இது என்பதே எல்லா ரசிகர்களின் ஏகோபித்த கருத்தாகும்;

# இளம் அவுஸ்திரேலிய அணி பாக்கிடம் துவண்டு போகவில்லை

சிங்கர் இன்னப் போட்டிகளின் பின் அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் மற்றும் தெ ஆபிரிக்கா, பாகிஸ்தான் உடனான ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் என்பவற்றுக்காகப் பாகிஸ்தான் சென்றது. தற்போது இரண்டு டெஸ்ட் போட்டிகள் முடிவடைந்து 3 நாடுகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஒரு டெஸ்ட் போட்டி நடைபெறவிருக்கின்றது.

பாகிஸ்தான் அணி பற்றிய கணிப்பீடு சாதகமானதாகவே இருந்தாலும் அவுஸ்திரேலிய அணி பற்றிய மதிப்பீடு பலவகையிலும் அமைந்திருந்தது ஏனெனில் மார்க் டெய்லர் அனுபவம் நிறையப் பெற்ற அணித் தலைவர் அல்ல. அதேவேளை அவரின் அணியில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் முற்றும் புதியவர்கள்.

இந்நிலையிற்றான் பாகிஸ்தான்-அவுஸ்திரேலிய முதலாவது டெஸ்ட் போட்டி பற்றி ரசிகர்கள் ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தார்கள். கராச்சியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 337 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்கல் பெவன் 82, ஸ்ரீவ்வோ 73, இயன் ஹீலி 57 என்றவாறு ரன்களைப் பெற வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ், முஸ்டாக் அகமட் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அவுஸ்திரேலியாவை இலகுவில் மேவிவிட இயலவில்லை. பாகிஸ்தான் தன் முதல் இனிங்சில் 256 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது சயீட் அன்வர் 85, வாசிம் அக்ரம் 39 ஓட்டங்கள் பெற்றனர். டிம் மே, சேன்வோர்ன் 2, 3 என இலக்குகளைச் சரிக்க இளம் ஆரம்பப் பந்துவீச்சாளர்கள் ஏன்ஜல், மக்ராத் ஆகியோரின் எஞ்சிய இலக்குகளை வீழ்த்தினர்.

அவுஸ்திரேலிய அணி தன் இரண்டாம் இனிங்சை ஆரம்பித்த போது முதல் இனிங்ஸ் போல ஆட்டத்தை தம் வசப்படுத்த பாகிஸ்தானின் இரண்டு 'W' க்களும் விடவில்லை இரண்டாம் இனிங்சில் அக்ரம்5, வக்கார் 4 என்ற வகையில் இலக்குகளைச் சரித்தெறிந்து விட்டார்கள் டேவிட் பூன் இச்சூறாவளிக்கு ஈடுகொடுத்து 114 ஓட்டங்களைப் பெற்றார். மார்க் வோ 61 ஓட்டங்கள் பெற்றார். 232 ஓட்டங்கள் மட்டும் அவுஸ்திரேலியா பெறமுடிந்தது.

இந்நிலையில் 314 ஓட்டங்கள் பெற்றால் பாகிஸ்தான் வெல்லும் எனும் நிலையில் அது தன் இரண்டாம் இனிங்சை ஆரம்பித்தது ஆனால் இவ்வாட்டம் இருபக்கமும் சாயலாம் என்ற நிலையே பெரும்பாலும் காணப்பட்டது, நான்காம் நாள் முடிவடையும் போது பாகிஸ்தான் 3 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இறுதி நாளில் அவுஸ்திரேலியா பாகிஸ்தானைச் சரிக்கும் என்றே அனைவரும் எண்ணினார் ஷேன்வோனின் பந்து வீச்சுக்கு முகம் கொடுப்பது பாகிஸ்தானுக்கு இலகுவாக இருக்கவில்லை.

3/155 என்று ஆரம்பித்த பாகிஸ்தான் 157 - 174-179--184 என்ற நிலையில் 7வது இலக்கில் நின்றது இருந்தும் பின் வரிசையில் ரசிட் லத்தீப் பெற்றுக்கொடுத்த 35 ஓட்டங்களும் இறுதி இலக்குச் சோடியாக இன்சமாம் உல் அக் (ஆட்டமிழக்காது58) முஸ்டாக் அசமாட் [ஆட்டமிழக்காது 20] சேர்ந்து சேகரித்த 57 ஓட்டங்கள் பாகிஸ்தானுக்கு ஒரு இலக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. ஷேன்வோனின் அற்புதப் பந்து வீச்சு (5189) அவருக்கு ஆட்டநாயகன் விருதைப் பெற்றுக் கொடுத்தது. 40 வருடங்களாகக் கராச்சியில் எந்த டெஸ்ட் ஆட்டத்தையும் தோற்கவில்லை என்ற சாதனையை பாகிஸ்தான் தட்டுத்தடுமாறிக் காத்துக் கொண்டது.

இரண்டாம் டெஸ்ட் ராவல்பிண்டியில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அற்புதமாக ஆடி 521/9 என்று குவித்தது நூறுகள் கொண்ட மூன்று சோடி சேர்ந்த ஆட்டங்கள் அமைந்தன. மைக்கல் ஸ்லேட்டர் 110- மார்க் டெபிலர் 69 மார்க் வோ 68, வெவன் 70, துரதிஷ்டமான ஸ்ரீவ்வோ 98, ஹீலி 58 என்று எல்லோருமே தம்மை நிரூபித்திருந்தனர். மோசின்கமால், அமீர் சொகையல் 3-2 என்று இலக்குகளை பெற வக்கார் 2, வசீம் 1 என இலக்குகளை பெற்றனர்.

2 ம் நாள் முடிவில் பாகிஸ்தான் தன் முதலாவது இனிங்சில் 1/48 என்றவாறு அடுத்த நாளை எதிர்நோக்கியது ஆனால் மறுநாள் பாகிஸ்தான் இலக்குகளை மக்டே மட்டும் பிளெமிங்கும் மளமளவெனச் சரித்து தமக்குள் 8 இலக்குகளைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர். அமிர் சொகெய்ல் 80 வசிம் அக்ரம் 45 ஓட்டங்களைப் பெற முடிந்தது. இந்நிலையில் 260 ஓட்டங்களுக்கப்பால் பாகிஸ்தானால் செல்ல இயலவில்லை. மிகவும் தளர்ச்சியானதொரு நிலையில் மீளவும் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடவேண்டியேற்பட்டது. இந்நிலையில் மாலிக்கும் அவர் அணியினரும் பெரும் போராட்டமொன்றையே நடாத்த வேண்டி வந்தது நான்காம் நாள் முடியும் போது பாகிஸ்தான் 2 இலக்குகளை மட்டும் இழந்து 324 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் சலீம்மாலிக் 155 ஓட்டங்களை ஆட்டமிழக்காத நிலையில் பெற்றிருந்தார். ஏலவேசயீட் அன்வர் 72 ஓட்டங்கள் பெற்று ஆட்டமிழந்தார் இறுதி நாள் ஆரம்பித்த போது ஒரு சில இலக்குகள் இலகுவாக வீழ்ந்தாலும் அணியை வீழ்த்த அவுஸ்திரேலியாவால் முடியவில்லை சலிம்மலிக் அற்புதமாக ஆடி தனது முதலாவது இரட்டைச் சதமாக 237 ஓட்டங்கள் பெற்று அணியைக் காப்பாற்றினார் இவருக்குத் துணையாக அமீர்சொகெய்ல் 75 ஓட்டங்களையும் ஆமர்மாலிக் 65 ஓட்டங்களையும் பெற்றனர் பாகிஸ்தான் மொத்த ஓட்ட எண்ணிக்கை 537 ஆக அமைந்தது.

இதன் பின்னர் ஆட்டம் வெற்றி தோல்வி இன்றி முடியும் என்பதில் எதுவித சந்தேகமும் இருக்கவில்லை. அவுஸ்திரேலியா 17 ஓட்டங்கள் பெற்றிருக்கையில் ஆட்டம் முடிவுற்றது. இதில் குறிப்பிடத்தக்கது பாகிஸ்தானின் இரண்டாவது இனிங்சில் அவுஸ்திரேலிய டேமியன் பிளேமிங் தொடராக 3 இலக்குகளை வீழ்த்தி Hatric தன் முதலாவது ஆட்டத்திலேயே பெற்றமையாகும். இவ்வகையில் இவர் உலகில் மூன்றாவது வீரராக அமைகிறார்.

## கலிபோர்னியாவில் ஆபிரிக்க ஆட்கொல்லி தேனீக்கள்

(கொழும்பு)

ஆபிரிக்க ஆட்கொல்லி தேனீக்கள் கலிபோர்னியாவில் இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. இந்த தேனீக்கள் விடயத்தில் அவதானமாக இருக்குமாறு கலிபோர்னியா மாநில அதிகாரிகள் மக்களைக் கோரியுள்ளனர்.

குவாட்டமாலா அரச சிறைச்சாலையில் கடந்த மாதம் 24-ம் திகதி, ஆபிரிக்க ஆட்கொல்லி தேனீக்கள் காணப்பட்டதாகவும் அரிசோனா மாநில எல்லையிலிருந்து 15 மைல் தொலைவில் இச்சிறைச்சாலை அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1956-ம் ஆண்டில் இவை பிரேசிலில் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன. அன்று, இரசாயனக் கூடத்திலிருந்து இவை வெளியேறின. இவை, 1990 ல் டெக்சாஸைக் கடந்து 1993-ல் அரிசோனாவுக்குள் நுழைந்துவிட்டதாகவும், மனிதர்களையும் மிருகங்களையும் தாக்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


விவசாயிகளே,

**தங்க விருது உங்களுக்குத் தான்!**

**வேளாண் மன்னர் தெரிவுப் போட்டி.....**

நீங்கள் நெற்பயிரிடும் விவசாயிகளாக இருந்தால் இந்தப் போட்டியில் பங்கு பற்றலாம்.

இந்தப் போட்டியானது வடதமிழீழம் முழுவதும் உள்ள சகல மாவட்டங்களிலும், மழையை நம்பிய நெற்செய்கையிலும்
நீர்ப்பாச்சுகை நெற்செய்கையிலும் தனித்தனியே நடாத்தப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்கு.......

- ★ உற்பத்திக் குழுக்கள்,
- ★ கமநல சேவை நிலையங்கள்,
- ★ விவசாயத்திணைக்களம்,
- ★ பசுமை வேளாண் சேவை நிலையம்,

மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களில் தொடர்பு கொள்ளவும்;

**விண்ணப்ப முடிவு திகதி:30-11-1994**

விவசாயப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழம்.

(சி-10646)



**பருத்தித்துறை காணி விற்பனைக்கு**

தும்பளை லட்சுமணன் தோட்டப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது

தொடர்பு:-
மு.நாகலிங்கம்
மொழி பெயர்ப்பாளர்
மே/பா. கு. பஞ்சரட்ணம்
நாச்சிமார் ஒழுங்கை,
2-ம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

(9851)



யாழ்ப்பாணம் - நீராவியடி

**கலைக் கல்லூரியின்**

**15 - வது ஆண்டு நிறைவு விழா**

இடம்:- **இளம் கலைஞர் மண்டபம்** சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்:- **6. 11. 94 இன்று ஞாயிறு மாலை 6 மணி**
தலைவர்:- புலவர் முத்து இராசரத்தினம் (நிலையத் தலைவர்)
மங்கள விளக்கேற்றல்:- நா. சின்னத்துரை
(வண்-வடகிழக்கு சனசமூக நிலையத் தலைவர் நீராவியடி)
பிரதம விருந்தினர்:- புதுவை இரத்தினதுரை
(விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் தமிழீழம்)
சிறப்பு விருந்தினர்கள்:- திரு வே. பொ. பாலசிங்கம் (ஆணையாளர்யாழ்.மாநகரசபை)
:- செல்வி மலர்சின்னையா (உபஅதிபர் நல்லூர் மங்கையர்க்கரசிபாடசாலை)
நன்றியுரை:- பசு. சிறிபதி

**நிகழ்ச்சி:- கலைக் கல்லூரி வழங்கும்**

**கதகளி பரதநாட்டியம்**

நட்டுவாங்கம்:- திருமதி சிவசக்தி இலங்கைவேந்தன்
பாட்டு:- செல்வி மல்லிகா கனகசபை
வயலின்:- வயலின் வித்துவான் எஸ். வெங்கடேஸ்வரசர்மா
மிருதங்கம்:- மிருதங்க வித்துவான் எஸ். பாலச்சந்திரசர்மா
ஜெண்டை:- பா. கபிலன்
தபேலா:- கா. துவாரகன்

பங்குபற்றுவோர்
கதகளி, பரதகலாமணி இலங்கைவேந்தனும் அவரது மாணவர்களும்
செல்வன்:- ராஜபேட்
செல்வி:- மகிழ்ஜினி கனகலிங்கம்
செல்வி:- சாமினி கிருஷ்ணசாமி

**இன்னிசை விருந்து**

இசை:- இசையமைப்பாளர் எஸ். பொன்னுத்துரை
பாட்டு:- செல்வி கோஷி வரதராஜா செல்வி பிறேமலதா பொன்னுத்துரை
புலவர் முத்து இராசரத்தினத்தின் கதை வசனம், நெறியாள்கையில்

**இலங்கை வேந்தன்** (இசை, நடன நாடகம்)

புலவராக - புலவர் முத்து இராசரத்தினம்
அனுமானாக - பசு சிறிபதி
மாரீசனாக - வைரி சந்திரசேகர்
கும்பகர்ணனாக - மு. சிவநாதன்
அகம்பனாக - தர்மலிங்கம்
இராவணனாக - இலங்கைவேந்தன்
இந்திரஜித்தாக - எஸ். என் சதீஸ்
விபூஷணனாக - டி. ஜெயபால்
சூர்ப்பனகையாக - செல்வி வேலுப்பிள்ளை
இராமனாக - சபேசன்
இலட்சுமணனாக - ராஜபேட்
சீதையாக - ரொசாயினி

ஒப்பனை:- **பென்ஜமின்**
ஒலி, ஒளி:- **ரோஸ் ஆட்**
நிகழ்ச்சித் தொகுப்பு:- **சு. தேவ் ஆனந்**

(9994)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

-நிர்வாகம்

நன்றி

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்
**"கல்யாணி கிறீம் கவுஸ்"**
73 சந்தோசம் தெரு,
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**"அம்பிகா நகை மாளிகை"**
74 கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்

**"மகாலட்சுமி நகை மாடம்"**
213 சந்தோசம் தெரு
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**"சந்திரா கச்சான் கொம்பனி"**
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

நிதான விலை சிறந்த ரகம்
**ச. லிங்கநாதன் வண்ணச்சோலை**
13, 14, மேஜர் சோதியா தெரு
பெரிய கடை
யாழ்ப்பாணம்

சுத்தமான சைவ உணவுக்கு
உரிய இடம்
**"தாமோதரம் விலாஸ்"**
403, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்
சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்கள்
**"பேரம்பலம் அன் கோ"**
இல. 32, 50, சந்தோசம் தெரு
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**"றஞ்சனா" வண்ண ஆடையகம்**
17, 18A, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்

**"சரஸ்வதி விலாஸ்"**
195 (57) கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்

**திருமணப் பொருத்துனர் சங்கம்**
விக்னேஸ்வரா ஒழுங்கை
இணுவில் தெற்கு
இணுவில்

சுத்தமான நல்லெண்ணெய்க்கு
வி. எஸ். பி (V. S. p)
**"பரிமளா ஸ்டோர்ஸ்"**
26A மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்
உரிமையாளர்:- வ. ச. பொன்னுச்சாமி

**"குயிக் காமன்ஸ்"**
பெண்களுக்கான பஞ்சாபி, சாறி பிளவுஸ்
உட்பட சகல தையல் வேலைகளுக்கும்
சிறுவர்களுக்கான உடைகள் தயாரிப்பதிலும்
அதி நவீன தையல் நிலையம்
குயிக் காமன்ஸ்
இல 183
சிறப்பு அங்காடி
நவீன சந்தை உட்புறம்
யாழ்ப்பாணம்
கிளை ஸ்தாபனம்:-
இல 162
நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

தவறு செய்வதில் தொடர்ந்து முனைவது தவறுக்கு சமாதானமாகாது. இது சுமையை மேலும் கனமாக்கும்

-- ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 06- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# எதிர்பார்க்க எதுவுமில்லைதான்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திசாநாயக்கா தெரிவாகிய பின்னர் நேற்று முன்தினம் உள்ளூர், வெளியூர் பத்திரிகையாளர்களை முதற்தடவையாகச் சந்தித்துப் பேசியுள்ளார். இம் மாநாட்டில் பலதரப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ள சிறிமா திசாநாயக்கா இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களுக்கும் பதில் அளித்துள்ளார்.

அவரின் இப்பதில்கள் இனப்பிரச்சினை விவகாரத்தில் முன்னைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் கொண்டிருந்த கொள்கையில் எந்தவிதமான மாற்றத்தையும் கொண்டதாகத் தெரியவில்லை. மாறாக கடந்த காலத் தலைவர்களின் நிலைப்பாடு மீண்டும் வற்புறுத்தப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

இந்தவகையில் 'விடுதலைப் புலிகள் தமது வன்முறைப் போராட்டத்தையும், ஆயுதங்களையும் கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்; அவ்வாறான பேச்சுக்களும் இலங்கை-இந்திய சமாதான உடன்படிக்கையின் அடிப்படையிலேயே அமையும்' என்பதே இனப்பிரச்சினை தொடர்பான சிறிமா திசாநாயக்கா கூறியவற்றின் முக்கியமான அம்சங்களாகும்.

சிறிமா திசாநாயக்காவின் இக்கூற்றானது கடந்த காலத்தில் ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோது கூறியவைதான். அதாவது இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கிய பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் பேச்சுவார்த்தை தொடர்பாக விதித்து வந்த நிபந்தனைகள் தான்.

சிறிமா திசாநாயக்காவின் இந்நிலைப்பாடானது இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரேவழி என்பதைச் சொல்லாமல் சொல்வதாகவே எடுத்துக் கொள்ளலாம். ஏனெனில் இந்நிபந்தனைகள் எப்பொழுதுமே ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது புதிய விடயமல்ல. அதாவது நிபந்தனையுடன் கூடிய பேச்சுக்களை தாம் எப்பொழுதுமே ஏற்கப் போவதில்லை என விடுதலைப்புலிகள் தெளிவாகவே பலதடவை அறிவித்துள்ளனர்.

இதேசமயம் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை சிங்கள மக்களின் நலனைப் பாதிக்கும் கபடமான நடவடிக்கை என்ற சிறிமா திசாநாயக்காவின் கூற்று சமாதானப் பேச்சுக்களில் இருந்து எந்தளவு தூரம் அவர் விலகியுள்ளார்/ அந்நியப்பட்டுள்ளார் என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

இவ்வாறாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் ஆட்சியாளர்களின் இனப்பிரச்சினை தொடர்பான கொள்கையை தானும் பின்பற்றுவதாக சிறிமா திசாநாயக்கா பிரகடனப்படுத்திய அதேவேளை இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு உட்பட்டே இனப்பிரச்சினை தீர்க்கப்படும் என அறிவித்துள்ளமையானது கணவனின் சிந்தனை வழியிலும் தான் செல்லவுள்ளதை அவர் காட்டிக் கொள்ள முற்பட்டுள்ளார் என்றே கொள்ள வேண்டும்.

இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட போது அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவிற்கு அடுத்து இவ் ஒப்பந்தத்தை ஆதரித்தவர்களில் முதன்மையானவர் காமினி திசாநாயக்காவே ஆகும். அத்தோடு காமினிதிசாநாயக்கா இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் தோல்வியில் முடிவடைந்த பின்னர் கூட அவர்தனது கொள்கையில் மாற்றம் செய்யவில்லை என்றே கூறலாம். இறக்கும் வரை அவர் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆதரித்தே வந்தார்.

இதேசமயம் இனப்பிரச்சினை தொடர்பாக டி.பி. விஜேதுங்காவின் நிலைப்பாட்டில் இருந்து காமினி திசாநாயக்கா சற்று மாறுபட்டவராக இருந்தார். வடக்கு-கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினைதான் என்பதை அவர் ஒப்புக் கொண்டாலும்' அவர் அதற்கு இந்திய-இலங்கை சமாதான உடன்பாடே தீர்விற்கான வழி என்றே கூறிக் கொண்டிருந்தார்.

இந்தவகையில் முன்னைய ஐ.தே.க. தலைவர்கள் போன்றே புதிதாக எழுந்துள்ள தலைவர் சிறிமா திசாநாயக்காவும் வரலாற்றில் இருந்து பாடம் கற்க மறுப்பவராகவே உள்ளார். ஆனால் புதிதாக எதையும் அவரிடம் எதிர்பார்ப்பதும் தவறுதான். ஏனெனில் அவர் ஐ.தே.கவின் தேவைக்காக தலைவராக்கப்பட்டவரே ஒழிய தலைமைத்துவத்தை தானாகப் பெற்றுக் கொண்டவரல்ல.

ஆகையினால் ஐ.தே.கட்சியின் வரட்டுத் தனமான கொள்கையையும், தமது கணவனின் தோற்கடிக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு புத்துயிர் கொடுக்க முற்படுவதையும் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இல்லாது இருக்கலாம். ஆனால் இது சிறிமா திசாநாயக்கா தேர்தலில் வெற்றியீட்டவும் வெற்றியீட்டினால் - வெற்றியீட்டுவாரா என்பது வேறு விடயம்- இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவும் உதவப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

# தமிழர் போராட்டத்தை பிரசாரம் ஆக்கியுள்ள சிறிலங்காவின் மூன்றாவது ஜனாதிபதி தேர்தல்

இன்னும் மூன்று தினங்களில் சிறிலங்கா மூன்றாவது ஜனாதிபதி தேர்தலை சந்திக்கவுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகமாக்கப்பட்ட பின்னர் நடைபெறவுள்ள மூன்றாவது தேர்தல் நான்காவது ஜனாதிபதியை தெரிவு செய்யப் போகின்றது. முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்ற 1982க்குப் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் இப்போது இத் தேர்தல் நடைபெறவுள்ளது. இத் தருணத்தில் முன்னைய தேர்தல்கள் இடம்பெற்ற போது நிலவிய அரசியற் சூழ்நிலைகளையும் இன்றைய நிலைமைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பயன் பொருத்தமுடைய ஒரு விடயமாகலாம். இனங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பதும் தேசிய ஒருமைப்பாடு என்பதும் அர்த்தமற்ற பதங்களாக அரசியல் அரங்கில் பேசப்பட்டு வருகின்றது என்பதற்கு எதிர் வரும் தேர்தல் ஒரு வகையில் உதாரணம் ஆகக் கொள்ளப்படக் கூடும். ஏனெனில் தீவு முழுமைக்குமான ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தலின் வாக்கெடுப்பில் கணிசமான மக்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என்பது தெளிவு-இன்னும் தெளிவாகக் கூறின் சிறிலங்காவின் மக்கள் தமது ஜனாதிபதியை தெரிவு செய்யவுள்ள இத் தேர்தலில் தாயகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பெரும்பாலும் பங்கேற்கப் போவதில்லை- அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும்வகையில் திருமதி சந்திரிகா தலைமையிலான அரசும் செயற்பட்டிருக்கவில்லை-

## முதலாவது தேர்தல்

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகமாக்கப்பட்ட பின்னர் முதலாவது தேர்தல் 1982-ல் இடம்பெற்றது- இத் தேர்தலில் ஐ. தே. க சார்பில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் சுதந்திரக் கட்சி சார்பில்ஹெக்டர் கொப்பேகடுவவும், தமிழ்க்காங்கிரசின் குமார்பொன்னம்பலமும், நவசமசமாசக்கட்சியின் வாசுதேவநாணயக்காரவும், ஜே வி.பி யின் ரோகண விஜேவீரவும், லங்கா சமசமாசக் கட்சியின் கொல்வின் ஆர். டி சில்வாவும் போட்டியிட்டிருந்தனர்-

தமிழ் மக்கள் முன்னெடுத்த ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பதற்கு இராணுவம் ஏவி விடப்பட்ட நிலை ஒரு புறமும், இலை மறை காயாக விடுதலைப் போராளிகள் செயற்பட்ட நிலை மறு புறமும் நிலவியது- அக் காலப்பகுதியில் தமிழர்களின் 'ஜனநாயகத்தலைமை' எனத்தம்மைக் கூறிக் கொண்டோர் துணிவுடன் தமது நிலைப்பாட்டை முன் வைப்பதற்குப் பதிலாக கபடத் தனமான முறையில் நடுநிலைமையை பேணுவதாக அறிவித்தனர்- எந்த வேட்பாளருக்கு தமது ஆதரவு என்பதை வெளிப்படுத்தவோ அல்லது இலங்கையின் ஒருமைப்பாட்டை பேண எத்தனிக்கும் தேர்தலில் தமிழ் மக்கள் பங்கு பெறுவது அவசியமற்றது எனவோ வெளிப்படையாக அறிவிக்க அவர்கள் தயங்கினர் அல்லது தவறியிருந்தனர்

இருந்த போதிலும் தமிழரான குமார் பொன்னம்பலத்தை விட சுதந்திரக் கட்சியின் ஹெக்டர் கொப்பேகடுவ தமிழ் மக்கள் மத்தியில் கணிசமான வாக்குகளைப் பெற முடிந்தது. இது குறித்துப் பின்னர் பலவாறான வியாக்கியானங்கள் முன்வைக்கப்பட்டன இனவாதத்திற்கு அப்பாற்பட்ட வகையில் தமிழ் மக்கள் வாக்களித்ததாகவும், மாற்றத்தை விரும்பிய வாக்குகள் அவை எனவும் அரசியல் விமர்சகர்கள் அர்த்தப் படுத்தினர். எனினும் பதவிக்கு வந்துவிட்ட ஜே. ஆர். ஜெயவர்த்தனாவையும் அவரது ஐ.தே. கவையும் திருப்திப்படுத்த முற்பட்டதே தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் செயற்பாடாகியது'

## இரண்டாவது ஜனாதிபதி தேர்தல்

ஜனாதிபதி பதவிக்கான இரண்டாவது தேர்தல் 1988 இல் இடம்பெற்றபோது நிலவிய அரசியல் சூழல் முற்றிலும் மாறுபட்டது. தமிழர்களின் தாயகப்பகுதிகள் இந்திய இராணுவத்தின் சப்பாத்துக் கால்களுக்குள் நசுங்குண்டு கொண்டு இருந்தது. இந்திய இராணுவத்தின் இருப்பிற்கு எதிராக தென்னிலங்கையில் கனல் மூண்டு கொண்டு இருந்தது இந்திய இராணுவத்தின் துப்பாக்கி முனையின் கீழ் இலங்கை பிரிக்கப்பட்டு விட்டதாகவும், தமிழர் தாயகத்தில் சிறிலங்காவின் ஆட்சி செத்து விட்டதாகவும், தென் இலங்கை அரசியல் வாதிகள் கூச்சலிட்டனர். இந்தியாவின் வானரப் பட்டாளங்களை வெளியேற்ற வேண்டும் என்ற வீர வசனங்களையும், முழக்கங்களையும் சிங்கள அரசியல் வாதிகள் வெளியிட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில் இந்திய இராணுவத்தை போர்க்களத்தில் நேரிடையாக எதிர்த்து குருதியை சொரிந்து தேசத்தை சிவக்கச்செய்தவர்கள் விடுதலைப் புலிகள் மட்டும் தான் என்பதே வரலாறு.

ஆர். பிரேமதாசவும், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவும், ஒஸி அபயகுணசேகராவும் இந்திய இராணுவத்தின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் தான் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்க வேண்டி இருந்தது எந்த வேட்பாளரை ஆதரித்தாலும் பரவாயில்லை, ஆனால் வாக்களிப்பில் கலந்து கொள்வதன் மூலம் இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு வாக்களியுங்கள் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராக அதிகாரிகள் தமிழர்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்த காலம் அது. எனினும் கொழும்பில் இந்திய எதிர்ப்பு உணர்வு தான் மேலோங்கி இருந்ததை எவரும் மறந்து விடுவதோ மறுத்து விடுவதோ கடினமானது

## டி.பி. விஜய துங்கவின் ஆட்சிக்காலம்

டி. பி. விஜயதுங்கவின் ஜனாதிபதி ஆட்சிக்காலம் இன்னும் மூன்று தினங்களில் முடிவுற்றுவிடும் தற்செயலாக வாய்த்த அதிகார நாற்காலி அப்பாவி மனிதனுக்கும் கூட எத்தகைய ஆணவத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதற்கு டி.பி.விஜயதுங்க எதிர்காலத்தில் ஒரு உதாரணமாக கொள்ளப்படக் கூடும். பிரேமதாசாவின் ''கூஜா தூக்கி'' யாக செயற்பட்ட ஒரே ஒரு தகைமையின் காரணமாக மட்டுமே பிரதமர் பதவியை பெற முடிந்தது டி.பி விஜயதுங்காவிற்கு. அதனால் அதிகார நாற்காலியில் ஏறியதும் சிறுபான்மை இனம் என்றும் மரத்தைப் பற்றிப் படரும் செடி, கொடி என்றும் வர்ணிக்க அவர் தலைப்பட்டிருந்தது தெரிந்ததே.

மேலும் அரசியலமைப்பின் பிரகாரமும், சட்டத்தின் வாயிலாகவும் எவ்வளவுக்கு அதிகாரங்கள் குவிக்கப்பட்டு இருந்தாலும் ஆற்றலும் ஆளுமையும் அற்ற ஒருவர் வெறும் கைப்பாவையாகவே செயற்படமுடியும் என்பதற்கும் டி. பி. விஜயதுங்காவின் ஆட்சிக்காலம்ஒருஉதாரணம். ஜே. ஆரின் கீழ் பிரேமதாசாவும், பிரேமதாசாவின் கீழ் டி பி விஜயதுங்காவும் நிலை நாட்ட முடியாத - பெற்றுக் கொள்ள முடியாத அதிகாரங்களை டி.பி விஜயதுங்காவின் கீழ் திருமதி சந்திரிகா பெற்றுக் கொள்ள முடிந்தது. இதனால்தான், சட்டப் புத்தகங்களிலும், அரசியலமைப்பிலும் எழுதப் பட்டிருப்பதால் மட்டும் எந்தக் கொள்கையும் அமுலாக்கப்பட்டு விட மாட்டாது என்பதையும், அதிகாரம் என்பது கொடுத்துப் பெறுவதல்ல, பதிலுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதே என்பதையும் டி.பி. விஜயதுங்காவின் ஆட்சிக் காலம் எதிர்காலத்திற்கு பாடங்களாக விட்டுச் செல்கிறது எனலாம்.

**இளையவன்**

## மூன்றாவது தேர்தல்

நாடு முழுமைக்கும் தேர்தலை நடத்த முடியாது என்பதையும், அதனால் எழும் சட்டச் சிக்கல்களையும் கருத்திற் கொண்டே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பாராளுமன்றத் தேர்தல் நடாத்தப் பட்டதாக கூறப்பட்டதுண்டு எனினும் அந்தநிலைமையில் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படாமலேயே ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. தேர்தலுக்கான அறிவிப்பைத் தொடர்ந்தோ அல்லது வாக்கு வேட்டையை மையமாகக் கொண்டோ தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் யதார்த்த பூர்வ நோக்கில் அணுகப்படலாம் என்று ஒரு பகுதியினரால் எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ் மக்களின் வாக்குகளை கவரும் நோக்கிலாவது அன்றாட வாழ்வின் சுமைகள் தளர்த்தப்படலாம் என்றும் தமிழ் மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட்டு கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கப்படலாம் என்று எதிர் பார்க்கப்பட்டதாயினும் இதில் எதுவித முன்னேற்றமுமின்றி வாக்கு ப்பதிவுகள் புதன்று இடம் பெறப் போகின்றது.

மேலும் ஜனாதிபதி தேர்தலின் வேட்பாளரான காமினி திசாநாயக்கவின் கொலையும் - குண்டு வெடிப்பு சம்பவத்தை பயன் படுத்தி இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசை சம்பந்தப்படுத்துவதற்கான பச்சைக் கொடி ஒரு புறத்தில் காட்டப்பட, மறு புறத்தில் செங்கம்பளமும் விரிக்கப் பட்டு விட்டது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பை பெறக் கூடிய இரு முக்கிய வேட்பாளர்களும் ஏதோ ஒரு வகையில், விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்தையும் தமது பிரசாரத்தில் சம்பந்தப் படுத்தியே வருகிறார்கள்- இந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலானது புலிப்படையினர் குறித்த பொது மக்களின் கருத்து அறியும் வாக்கெடுப்பாக கருதப் படலாம் என்று பி.பி.சி. முகவர் ஜேர்ஜ் ஆர்னி குறிப்பிட்டிருப்பது பொருத்தப்பாடு உடையதாகலாம்- எனினும் தென்னிலங்கையின் அரசியல் வாதிகளுக்கு தமிழ் மக்கள் மட்டுமன்றி தமிழ் மக்களின் வாக்குகளும் ஒரு பொருட்டல்ல என்பதை இத் தேர்தல் புலப்படுத்துவதாக எதிர் காலம் குறித்துக் கொள்ளும்-

# தொண்டா மாறினாலும் இ.தொ.கா ஐ.தே.கவையே ஆதரிக்கிறது

## ஐலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

தொண்டமான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்ட போதிலும் அவரது தலைமையிலுள்ள தொழிற்சங்கம் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக்கட்சியையே ஆதரிக்கின்றதுஎன 'ஐலன்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 27 வருடங்களாக ஐ.தே.கவையே இ.தொ.கா. ஆதரித்து வருகிறது. திரு. தொண்டமானின் நெருங்கிய சகாக்கள் சிலர்கூட ஐக்கிய தேசியக்கட்சியை ஆதரித்து வருவதாக தெரியவருகிறது. தொண்டமான் ஜனாதிபதித் தேர்தலில் தனது கட்சி நடுநிலைமை வகிக்கும் எனதெரிவித்திருந்த கருத்தில் எதுவித மாற்றமும் இல்லை என கடந்த நவம்பர் முதலாந்திகதி தெரிவித்துள்ளார்.

தொண்டமான் எங்காவது மலையக மக்களை பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டால் ஐ தே.க தேசியப்பட்டியல் எம்.பியான தொண்டமான் மீது நடவடிக்கை எடுக்க இருந்ததாகவும் ஆனால் அவரின் தற்போதைய நிலையை இட்டு ஐ.தே.க. வினர் திருப்தியடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

# இராணுவத்தினரின் அடியினால் முகாமில் சுய நினைவிழந்தேன்!

## பலாலியிலிருந்து விடுவிக்கப்பட்டவர் தகவல்

(வடமராட்சி)

எனது தலை புக முடியாத துவாரங்களுக்குள் தலையை பலாத்காரமான முறையில் புகுத்தி கண்டபடி தாக்கியதில் எனது தலைப்பகுதி காயமடைந்த தோடு வீக்கமடைந்துள்ளது.

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் ஒரு வாரம் கடுத்து வைக்கப்பட்டு இராணுவத்தினரின் சித்திரவதைக்கு உள்ளாகி விடுவிக்கப்பட்டு வந்த புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த குட்டித்தம்பி-இராசகுமார் பருத்தித்துறை இறங்குதுறையில் வைத்து வடமராட்சி செய்தியாளருக்கு முன் கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஒரு விவசாயி, வெள்ளிக்கிழமை விரதம் இருப்பவன் சம்பவதினம், கள்ளிக்காடு ஐயனார் கோவிலுக்குச் சென்றிருந்தேன். அப்பகுதியில் மறைந்திருந்த படையினர் என்னை வருமாறு சைகை காட்டினர். நான் எதுவுமே செய்ய முடியாத வகையில் இராணுவத்தினரிடம் சென்றேன். அக்கணம் முதல் விடுதலை பெறும் வரை நான் படையினரால் இம்சிக்கப்பட்டேன்.

என்னை விடுதலைப் புலிகள் எங்கே இருக்கிறார்கள், பெண் புலிகள் பற்றியும் கேட்டுக் கேட்டு தாக்கினர். என்னை படையினர் தாக்கியதில் என் மன நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எங்கு பார்த்தாலும் எனக்கு இராணுவம் நிற்பது போல் தெரிகிறது. முகாமில் வைத்து தாக்கியதில் எனக்கு சுய நினைவு இல்லாமல் இருந்தேன்.

அவர்கள் சிறிய துவாரங்களுக்குள் எனது தலையை பலாத்காரமான முறையில் திணித்து கம்பிகளாலும் தடிகளாலும் கை கால்களாலும் கடுமையாக தாக்கினர் என்றார். (யோ)

### குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டோரில்

# காப்புறுதி செய்தோருக்கு நட்டஈடுவழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கிரான்பாஸ்குண்டுவெடிப்பில் இறந்தவர்களின் காப்புறுதி செய்துள்ளவர்களுக்கு நட்டஈடு வழங்க காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆலோசித்து வருகிறது.

முதலாவது கொடுப்பனவு கடந்த புதன்கிழமை இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவரான டாக்டர் விஜேசேகராவின் பாரியாருக்குவழங்கப்பட்டுள்ளது ஆயுள்காப்புறுதிஒப்பந்தப் பணமான பத்து லட்ச ரூபா இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. காப்புறுதி தலைவர் கே டபிள்யூ விக்கிரமசிங்க இதற்கான காசோலையை வழங்கினார்

காப்புறுதிபணத்திற்கு விண்ணப்பித்துள்ள கிறிஸ்டி பெரேரா குடும்பத்திற்கு ஆதாரபூர்வமானஆவணங்கள சமர்ப்பிக்கப்பட்டவுடன் நட்ட ஈட்டுத்தொகைவழங்கப்படும் என கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்தார்

வேறுயாராவது இறந்திருப்பின் அது குறித்து ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றதும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்

### புற்றுநோய் மருந்து எயிட்ஸ் நோய்க்கும் பயன்

லூக்கேமியா எனும் இரத்தப்புற்று நோய்க்கு சிகிச்சை அளிக்க 30 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வந்த ஒருவகை மருந்து எயிட்ஸ் நோய் கிருமிகளை கட்டுப்படுத்துவது குறித்து கண்டறியப்பட்டுள்ளது.

இம்மருந்து எயிட்ஸ் கிருமிகளை கட்டுப்படுத்த உதவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 11. 06**

**ஞாயிறு இரவு**

08. 01 - இசையரங்கம் நிகழ்ச்சியில் பாடுபவர் செல்வி ஜெயந்தி . அவர்கள்
08. 20 - தாயகப்பாடல்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - தொடர் நாடகம் பொன் கணேசமூர்த்தி எழுதும் '' இலங்கை மண் '' 46 ம் அங்கம்
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

**1994. 11. 07**

**திங்கள் காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள்கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி
08. 00 - மணிக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

# நீதிவான் அனுமதி பெற்றபின்பே சம்பவ இடத்திற்கு செல்ல முடியும்

## கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)
கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்பு தொடர்பாக பொலிசாருக்கு தேவையான சகல பணிப்புரைகளையும் தாம் வழங்குவதாக கொழும்பு மேலதிக நீதிவான் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கா முன்னாள் அமைச்சர் வீரசிங்க மல்லிமராட்சி உட்பட பலர் கொல்லப்பட்ட குண்டுவெடிப்பின் பூர்வாங்க விசாரணை நீதிவான் சம்பா புத்திபால முன்னிலையில் ஆரம்பமானது.

இறந்தவர்களின் குடும்ப நலன்களைக் கவனிக்க ஜனாதிபதி சட்டத்தரணிகளான ஏ. எல். எம். அமீன், லக்ஸ்மன் பர்னாண்டோ, ஜெயந்த டி. சில்வா, மொறிஸ்பீரிஸ் ஆகியோர் சட்டத்தரணி திருமதி சமரதுங்காவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

சம்பவம் நடந்த இடம் யாருடைய பாதுகாப்பில் இருந்ததுஎனக் கேட்டபோது அது தமது கட்டுப்பாட்டில் இருந்ததாக நீதிவான் தெரிவித்தார்.

அப்படி இருந்தபோதும் மன்றின் அனுமதி பெறாது சி. ஐ. டி பொலிசார் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் போய் வருவது முறையா என சட்டத்தரணிகள் கேள்வி எழுப்பினர். மன்றின் அனுமதி பெற்றே செல்ல வேண்டும் என நீதிவான் பதிலளித்தார்.

புலனாய்வு முன்னேற்றம் பற்றி நன்கு அறியாமல் பத்திரிகைகளில் அறிக்கைகள் வெளியாகின்றனவே எனக் கேட்டபோது ஸ்தலத்தில் கைப்பற்றப்பட்ட கமராவின் புகைப்படச் சுருளோ அல்லது படமோ மன்றுக்கு இன்னமும் கையளிக்கப்படவில்லை எனப் பதிலளித்த நீதிவான் இது தொடர்பாக சகல பணிப்புரைகளையும் வழங்குவதாக மேலும் தெரிவித்தார். மேல் விசாரணை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### ராணுவ முகாம்களில் கடமையின் போது

# காணாமற்போன சிற்றூழியர்கள் விபரம் வெளியிட அரசு பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)
ராணுவ நடவடிக்கையின் போது காணாமல்போகும் மற்றும்மரணமடையும்ராணுவத்தினரினதும் பொலிசாரினதும் விபரங்களை வெளியிடும் அரசாங்கம் இராணுவ பொலிஸ் முகாம்களில் பணிபுரிந்து காணாமல் போகும் சிற்றூழியர்களின் விபரங்களை வெளியிட மறுப்பதாக அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனம் குற்றம்சாட்டியுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொலிஸ், இராணுவ முகாம்களில் பணிபுரிந்த சிற்றூழியர்கள் பலர் இராணுவ நடவடிக்கையின் போது காணாமல் போயுள்ளனர். இவர்கள் இறந்துள்ளார்களா அல்லது இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரங்களை வெளியிடுவதில் அரசு தயக்கம் காட்டுவதாக அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனம் அரசு மீது குற்றம் சாட்டுவதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அச்சங்கம் யாழ். கோட்டை மற்றும் பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்து காணாமல் போயுள்ளதாக கருதப்படும் ஆறு சிற்றூழியர்களின் விபரங்களை அறிவதற்காக அரசாங்க பொதுச்சேவை சங்க யாழ் கிளையின் உதவியை நாடியுள்ளதாக தெரியவருகின்றது. (சி)

# குடாநாட்டு அபிவிருத்திக்கு 'ஹெல்வெரஸ்' நிதி வழங்க திட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி திட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்துள்ளோம். இந்த நோக்கில் தான் எனது யாழ். வருகை அமைந்துள்ளது.

இவ்வாறு நேற்றுக் காலை பிளப்பயன் கப்பலில் யாழ். வந்துசேர்ந்த ஹெல்வெராஸ் நிதி வழங்கும் அரசசார்பற்ற ஸ்தாபனத்தின் சிறிலங்கா பிரதிநிதியின் உதவியாளர் எம். பஷ்றாப் ஈழநாதம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

நேற்று மாலை யாழ். நகரில் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய பின்னர் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களைப் பற்றி கூறினார்.

பல இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு யாழ் மாவட்டத்தில் கிராம ரீதியாக அபிவிருத்தி வேலைகள் பலவற்றை செய்வதற்கு தமது ஸ்தாபனம் திட்டமிட்டுள்ளதெனவும் இங்கு செயல்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றிடம் இந்த திட்டம் கையளிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்,

நீர் வசதி, வீதி திருத்தம், மலசலகூட அமைப்பு வீடமைப்பு ஆகியவற்றுடன் மேலும் பல அபிவிருத்தி வேலைகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

இங்குள்ள தேவைகளை அவதானிக்கவும் இவை பற்றி ஆராயவும் தாம் வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிதி ஸ்தாபனம் மட்டக்களப்பில் வாகரை உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 105 கிராமங்களில் புதிய அபிவிருத்தி திட்ட வேலைகளை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்கு செயல்படும் அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் இங்குள்ள முக்கிய வேலைத் திட்டங்கள் பற்றிய விபரம் பெறப்படும். குறிப்பிட்ட வேலைகளில் ஈடுபடக்கூடிய ஒருசில நிறுவனங்களிடம் இந்த வேலைத்திட்டம் ஒப்படைக்கப்படும்.

நன்கொடை ரீதியாக மக்களுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் தனித் தனியாகச் சந்தித்து பேசவுள்ளதாகவும் இதன்பிறகு இந்த ஸ்தாபனத்தின் பிரதிநிதியுடன் பேசிய பின்பே அபிவிருத்தி திட்ட வேலைகள் பற்றி இறுதி முடிவு எடுக்கப்படும் என்றார். (தி), (பா)


## வடமராட்சி மக்களுக்கு ஓர் நற்சேவை

வடமராட்சி மக்களின் நலன் கருதி 'ஈழநாதம்' தினசரி நிறுவனத்தின் விளம்பர சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது:

இடம்: கவிதா ரேடர்ஸ். பிரதான வீதி
பருத்தித்துறை.
(வேலாயுதம் மகா வித்தியாலயம் முன்பாக)

காலம்: 1-11-1994 திகதி முதல்
பணியாளர். வடமராட்சி செய்தியாளர்
எம். கே யோகரட்ணம்

குறிப்பு:-
விளம்பரங்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

(இ) ஈழநாதம் நிர்வாகம்

## கணக்கியல் கணக்காய்வுப் பயிற்சி நெறி

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையினால் நடாத்தப்பட்டு வரும் கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சிக் கல்லூரியின் அடுத்த கல்வியாண்டிற்குத் (1995) தெரிவு செய்வதற்காக க. பொ. த. உயர் தரத் தேர்வில் வர்த்தகப்பிரிவில் தேறியவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன;

★ வேண்டுகை அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல்மூலையில் ''கணக்கியல், கணக்காய்வுப் பயிற்சி நெறி'' எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

★ பயிற்சிநெறிக்கான செலவு முழுவதும் எம்மால் ஈடுசெய்யப்படும்.

★ வேண்டுகை முடிவு நாள் 20-11-1994

அனுப்பவேண்டிய முகவரி:-
வருவாய்ப்பகுதிச்செயலகம்
நிதித்துறை
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

(சி-10658)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6 ஆந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### பிரதமர்

தென்னிலங்கையில் ஒரு சில பகுதிகளில் காமினியின் கொலையைத் தொடர்ந்து, ஐ தே கவுக்குஅனுதாபவாக்குகள் அதிகளவில் கிடைப்பது நிச்சயமான அதேவேளை, இதே நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவும் சில இடங்களில் அதிகரித்துள்ளதாகவும் மேற்படி அரசு சாராத அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

### இந்திய

திதைநடத்துவதற்கேஎன்றார் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்தியாவும். இலங்கையும் இணைந்து இராணுவ ரீதியிலும் செயற்படுவது தொடர்பாகவும் காமினிதிசாநாயக்கா இந்தியாவில் ஆராய்ந்தார் எனவும் கூறினார்.

கோல்பேஸ் ஹோட்டலில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர்மேலும் கூறுகையில் சமஷ்டி ஆட்சி முறை பற்றி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் தான் பாராளுமன்றத்தில்கூட குறிப்பிட்டு இருப்பதாகவும் எனினும் அதற்காக தாம் பதவி நீக்கம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

### மக்கள்

குண்டுகளை தயாரிக்க உதவியமைதான்: முந்நூறுக்கும் மேற்பட்ட புலிகளும் நீதியமைச்சின் விசேட உத்தரவில் விடுவிக்கப்பட்டனர். இதற்கு எல்லாம் கிடைத்த விளைவு காமினி குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதுதான் வடக்கிற்கு உணவு கொண்டு சென்ற பெரிய கப்பலொன்றையும் புலிகள் தகர்த்தனர். கடற்படையினரின் சாகரவர்த்தனா கப்பலும் தாக்கப்பட்டது. கிழக்கிலும் இராணுவத்தை தாக்கி கொன்றனர். இதற்கு அரசாங்கம் என்ன செய்தது? சமாதானம் தொடர்பாக எந்த ஒரு இழப்பையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவே அரசாங்கம் கூறி வருகிறது. பேச்சுக்களை ஒரு தளமாக பாவித்து தங்களை பலமாக்கி கொள்ளவே புலிகள் முயல்கின்றனர்

எமது நாடு ஒரே நாடாகவே இருக்கும் போது, புலிகளின் கொடியின் கீழ் பேச்சு நடைபெற்றது புலிகளின் வாகனங்களில் அரசாங்க பிரதிநிதிகள் சென்றனர். பிரபாகரனின் படத்தை வைத்து பேச்சு நடந்தது இது எந்த ளவில் சரியானது? பிரதம மந்திரி அவர்களே, நீங்கள் சாதாரண மக்களின் உயிர்களோடு விளையாடுவதை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை.

பிரபாகரனுடன் நடத்துவது சமாதானப் பேச்சுக்களல்ல. சட்டரீதியாக ஒரு நாட்டை அவருக்கு கொடுக்கும் நிலையை உருவாக்க வேண்டாம் பிரதமர் வடக்கிலுள்ள ஐந்துலட்சம் வாக்குகளுக்காகவே இதனைசெய்கிறார். அதற்காக நாட்டையும் மக்களையும் பணயம் வைக்கின்றார் என அவர் தெரிவித்தார்.

### தேர்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகளில் 167 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும் இவற்றில் பணியாற்ற சுமார் 400 பொலிசார் அனுப்பப்பட்டு இருப்பதாகவும்மேலும் கூறப்படுகிறது.

### தொகுதி

வேட்பாளர்களின் விருப்பத் தெரிவு வாக்குகள் மாற்றப்பட்டு முடிவு தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஒன்பதாம் திகதி நள்ளிரவிலிருந்து வெளியாகும் என தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;


யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்
பொ. தாசனின்

## "இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30, 4-30, 6-30
சனி, ஞாயிறு 2.30 மட்டும்
ஒகஸ்ட் '94 ஒளிவீச்சு காண்பிக்கப்படும்.
(சி-10636)


# வைத்தியரிடம் சிகிச்சை பெறலாம்; அவர் மனைவியிடம் பெறலாமா?

### ஏ. ஜே. ரணசிங்கா கேள்வி

(கொழும்பு)
ஒரு வைத்தியரிடம் சிகிச்சை பெறலாம் அவர் இறந்து விட்டால் அவரது மனைவியிடம் சிகிச்சை பெற முடியுமா? இவ்வாறே திருமதி சிறிமா திசாநாயக்காவின் நிலையும் உள்ளது என ஜனாதிபதி தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் ஏ. ஜே. ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

ருவான்வெலியில் நேற்று உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்: ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி இன்று உறுதியாகி விட்டது உண்மையில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட வேண்டிய ரணில் விக்கிரமசிங்கா ஒதுக்கப்பட்டு விட்டார். ஐ. தே. க. இன்று எம். எச். மொகமட்டினதும், சுசில் முனசிங்காவின் கையிலுமே சென்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# 300 உயர் அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டு

அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த முந்நூறுக்கும் அதிகமான உயரதிகாரிகள் மற்றும் பணிப்பாளர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன:

இவர்களில் பத்துப் பேருக்கான விசாரணைகள் முடிவுற்று குற்றங்கள் நிரூபிக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)
வல்வை கவிக்குயில்கள் கலாமன்றத்தின் 'அழகிய கண்ணே' கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று மாலை வல்வை சிவகுரு வித்தியாலயத்தில் நடைபெறும். இவ் விழாவில் இலக்கிய, ஓவிய, நாடகத் துறையின் மேம்பாட்டிற்கு உழைத்த படைப்பாளிகட்கு விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

### ஹபறணவில் ஜெனரேட்டர்

[வடமராட்சி]
யாழ் வைத்தியசாலையின் பாவனைக்கென 200 கே. வி. கொண்ட ஜெனரேட்டர் மற்றும் யாழ் பிராந்திய சுகாதாரசேவை திணைக்களத்திற்கான ஜெனரேட்டர்களும் இன்று பருத்தித்துறை வந்து சேரும் என எதிர் பார்க்கப் படும் ஹபறண கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

யாழ் இலங்கை வங்கிக்கான குறித்த தொகைப் பணமும் சீனி,சிமெந்து, தபால்பொதிகள் என்பனவும் இக் கப்பலில் எடுத்துவரப்படும் என தெரிய வருகின்றது. (யோ)

### உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]
யாழ் மிட்ரவுண் றோட்டரக்ட் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஞானமுருகன் எதிர் றோயல்ஸ் விளையாட்டுக் கழகமும், பாடும்மீன் எதிர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன;

### ஐ.தே.க

வார்த்தை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் திறைசேரியிலிருந்து 20கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தைப் பெற்று ஆயுதம் வாங்குவதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளது:

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியை ஆதரிக்க முன்வராத பல கட்சிகளினதும் நன்மதிப்பை இப்போது அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது

தொண்டமான் தலைமையிலான இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஜனதா விமுக்தி பெரமுன ஆகியன இவற்றில் அடங்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு உதவுவது என்று இ.தொ.கா தீர்மானித்திருப்பது தற்போதைய அரசியல் போக்கில் ஏற்பட்டுள்ள மற்றுமொரு முன்னேற்ற நிலைமையாகும் எனதெரிவித்தார்

# மாவீரர் நாள் கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)
தமிழீழநிர்வாகசேவையினர் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் உள்ள கிராமசேவகர்களுக்கான மாவீரர் நினைவு நாள் கருத்தரங்குகளை நடாத்தவுள்ளது-

நாளை மாலை 3மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் யாழ் இந்து குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது-

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் செவ்வாய் மாலை 3மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது

கரவெட்டி, பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் 9-11-94 மாலை 3 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்கல் லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி, பளை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் 10-11-94 மாலை 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்

இக் கலந்துரையாடல்களில் அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ளவும் என தமிழீழ நிர்வாக சேவை கேட்டுள்ளது-

★ ★ ★

வட்ட ரீதியாக சனசமூக நிலையங்கள் கிராம முன்னேற்ற சங்கங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கோவில் நிர்வாகங்கள், வர்த்தக சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொது அமைப்புக்களிற்கான மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

வடமராட்சி கோட்டத்தில், கரவெட்டி - உடுப்பிட்டி வட்டத்தில் நாளை பி.ப 4 மணிக்கு பொன்னம்பலம் வித்தியாலயம் மூத்த விநாயகர் கோவிலடியிலும், வலிகாமம் கோட்டத்தில் யாழ்-நல்லூர் வட்டத்தில் நாளை பி.ப 4மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்திலும், கோப்பாய் வட்டத்தில் 8ந்திகதி பி. ப 4மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும், உடுவில் - தெல்லிப்பழை வட்டத்தில் 8ந் திகதி பி. ப 4மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும், சங்கானை வட்டத்தில் 9ந் திகதி பி. ப. 4 மணிக்கு சங்கானை சிவப்பிரகாசா வித்தியாலயத்திலும், சண்டிலிப்பாய் வட்டத்தில் 9ந் திகதி பி, ப. 4 மணிக்கு சண்டிலிப்பாய் ராஜா பாடசாலையிலும் தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில் நாளை பி. ப. 4 மணிக்கு கைதடி விக்னேஸ்வராவித்தியாலயத்திலும், கொடிகாமம் வட்டத்தில் 8ந் திகதி பி. ப. 4மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், பளை வட்டத்தில் 9ந் திகதி பி. ப. 4 மணிக்கு பளை மகா வித்தியாலயத்திலும், சாவகச்சேரி வட்டத்தில் 10ந் திகதி பி. ப. 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கலந்துரையாடல்கள் நடைபெறும் என யாழ் மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

### ஐ.தே.க தேர்தல்

ணுவத்தினரையும் பொலிசாரையும் தங்கள் பக்கம் இழுக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றார் வழமையாக இனவாதப் பிரசாரம் செய்யும் பௌத்த பிக்குகள் கூட ஒதுங்கி இருக்கும் இன்றைய நிலையில் ஐ. தே. க. தன் இனவாத கருத்துக்களை வெளியிட்டு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்-

# இன்று சைவநெறித் தேர்வு

(தொல்புரம்)
யாழ் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்படவுள்ள சைவநெறித் தேர்வு பரீட்சை இன்று பாடசாலைகளில் நடைபெறும்: யாழ்; மாவட்டத்திலுள்ள சுமார் 200 பாடசாலைகளில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையில் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் தோற்றவுள்ளனர். (41)


## காணவில்லை



செல்வன் துரைசிங்கம் ஜெயச்செல்வம் (லவன்) (வயது 15) என்பவரை கடந்த 24-10-1994 முதல் காணவில்லை. இதனால் இவரது தாயார் கடும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதால் இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர் யாரேனும் தயவு செய்து கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

இல: 65, அம்மன் வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்
து. பூமகள்
(சகோதரி)
(9995)